செந்தமிழ்ச் செல்வி

உள்ளுறை

சிலம்பு ௪௮] வள்ளுவர் ஆண்டு ௨௦௦௪, கார்த்திகை (Dec'73) [பரல்-௪

'செந்தமிழ்ச் செல்வி'

இதழாசிரியர் கூட்டத்து உறுப்பினர்கள்

க. டாக்டர் ந. சஞ்சீவி, எம், ஏ., பி.எச்டி.
தமிழ்த்துறைத்தலைவர், சென்னைப் பல்கலைக்கழகம்

உ. 'சித்தாந்த கலாநிதி', உரைவேந்தர்,
ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை அவர்கள், மதுரை

ங. திரு. கொண்டல், சு. மகாதேவன் அவர்கள், எம். ஏ., பி. எஸ்ஸி
இயக்குநர், தமிழகவரசு தமிழ் வளர்ச்சித்துறை.

ச. செஞ்சொற்கொண்டல், வித்துவான்,
டாக்டர் சொ. சிங்காரவேலன், எம்.ஏ., டிப். லிங்.
அ. வ. அ. கல்லூரி, மாயூரம்.

ரு. செந்தமிழ்க் கலைமணி, வித்துவான்,
பண்டித. கா. பொ. இரத்தினம் அவர்கள்,
பி.ஏ. (ஆனர்சு) (லண்டன்) எம்.ஏ., பி.ஓ.எல். (சென்னை)
கொழும்பு.

சு. புலவர் இரா. இளங்குமரன்,
திருநகர், மதுரை-6.

எ. திரு. இரா. முத்துக்குமாரசாமி, எம்.ஏ., பி.லிப்.
நூலகர், மறைமலையடிகள் நூல்நிலையம், சென்னை.

17-12

செந்தமிழ்ச் செல்வி

திங்கள் வெளியீடு

சிலம்பு சஅ	திருவள்ளுவர் ஆண்டு உ00ச, கார்த்திகை டிசம்பர் 1973	பரல் ச

திருக்குறள் பணியே கழகத்தின் தனிப்பெரும் பணி

(முன் கசுஉ-ஆம் பக்கத் தொடர்ச்சி)

1969 மார்ச்சுத் திங்களில் தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணு அவர்களை அமெரிக்காவிலுள்ள 'ஏல்' (yale) பல்கலைக் கழகம் சிறப்புறுப்பினராக அழைத்திருந்தது. அவர்கள் சென்ற போது அரசுச் சின்னம் (Emblem) அழுத்தப்பெற்ற 'போப் திருக்குறள்' பரிசுப் பதிப்பில் 50 படிகளை வாங்கிச் சென்றனர். அதனை வைத்தே ஏல் பல்கலைக் கழகத்தின் மாணவர்கட்குப் பாடம் சொன்னபோது எடுக்கப்பெற்ற படம் செந்தமிழ்ச் செல்வியில் முன்பே வெளியிடப் பெற்றுள்ளது. அந்த நூலினைச் சில நூல்நிலையங்கட்கும் பெருமக்கள் சிலர்க்கும் பரிசாக வழங்கி யுள்ளனர். அமெரிக்காவிலிருந்து அறிஞர் அண்ணு அவர்கள் திரும்பியபின் காஞ்சிபுரத்தில் நடைபெற்ற கூட்டத்திலே,

> ''வெளிநாட்டில் நம் தமிழ் மொழிக்குப் பெருமை ஏற்படப் 'போப் திருக்குறள்' நன்கு பயன்பட்டது, எல்லாப் பெருமையும் நம் கழகத்துச் சுப்பையாவுக்கே உரியன.''

என்று பேசியதைக் கேட்டதாகத் தவத்திரு ஞானப்பிரகாச அடிகளார் எழுதியது செந்தமிழ்ச் செல்வியில் வெளிவந் துள்ளது. அதன் பின்னரே அறிஞர் அண்ணு அவர்கள் கழக ஆட்சியாளர்க்குப் 'பத்மஸ்ரீ' (தாமரைச் செல்வர்) என்ற விருது

வழங்குமாறு நடுவணரசுக்குப் பரிந்துரைத்தனர் எனக் கருத வேண்டியதாகின்றது.

சில ஆண்டுகட்குமுன் தலைசிறந்த நடிகர் திரு சிவாசி கணேசன் வெளிநாடுகட்குச் செல்லும் வழியில் எகிப்து நாட்டுத் தலைவர் நாசருக்கு உயர்ந்த கட்டடமுடைய 'டாக்டர் போப் திருக்குறளைப்' பரிசாக வழங்கினர்.

முதன்முதல் திருவள்ளுவர் திருக்குறள் முழுமையும் ஆங்கிலத்திலே மொழிபெயர்த்தியற்றிப் புகழ் பெற்றவரும் தமிழ் நாட்டிலே 1839 முதல் 43 ஆண்டுகள் தமிழைக் கற்றுத் தமிழ்ப் பண்பிலே திளைத்தவரும், ஓய்வுபெற்றுத் தமது தாய் நாட்டுக்குச் சென்றபின்னர் தமது இறுதிக்காலம் வரை தமிழ் இலக்கியங்களையே கற்றுத் தமிழ்ப்பணி புரிந்தவரும், தமது கல்லறையில் தம்மைத் 'தமிழ் மாணவன்' (A Tamil Student) என்று பொறிக்கச் செய்தவருமான **டாக்டர் சார்ச்சு உக்ளோ போப்** (Dr. George Uglow Pope) அவர்கள் வரலாற்றை இங்கே விளக்குவது நமது கடப்பாடாகுமன்றோ!

டாக்டர் போப் 1820 ஏப்ரல் 24 ஆம் நாள் இங்கிலாந்திலே பிறந்தார். அவர்தம் தந்தையார் ஃச்காட்டிசு வணிகர் (Scottish Merchant) ஆவர். அவர் தமது 17 ஆம் அகவையில் சமயப் பரப்புநராகத் தமிழ் நாட்டுக்குப் போக விரும்பித் தலைமைக் குருவின் இசைவு பெற்றார், அதுமுதல் தமிழ்மொழியைக் கற்கத் தொடங்கினர். 1839 இல் சென்னைப் பட்டினத்துக்குக் கப்பல் ஏறி வந்துசேர்ந்தார். சென்னையில் வெஃச்லியன் சமய நிலையத்திலே பணி ஏற்றார். அங்கிருந்து கடலூருக்குச் சமயப் பரப்புநராக மாற்றப் பெற்றார். பின் 1841 இல் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள சாயர்புரம் என்னுஞ் சிற்றூருக்குச் சமயப் பணிக்காகவே அனுப்பப் பெற்றார். அங்கே சமயப்பணி புரிந்து வருகையில் இறைநூற் பயிற்சிப் பள்ளி (Seminary) யை நிறுவி அதன்வழிச் சமயச் சொற்பொழிவாளர்கட்கும் சமய குருமார் கட்கும் பயிற்சியளித்தனர். அப்பள்ளி 1880 இல் இரண்டாம் நிலைக் கலைக்கல்லூரியாகிப் பின்னர் டாக்டர் போப் நினைவு உயர் நிலைப் பள்ளியாயிற்று. இப்போது சில ஆண்டுகட்குமுன் மீண்டும் முதல்நிலைக் கலைக்கல்லூரியாகி, டாக்டர் போப் திருப் பெயரிலேயே நடைபெறுகின்றது. ஆக்சுபோர்டு பல்கலைக் கழகம் டாக்டர் போப் அவர்களின் தமிழ்ப்புலமையினையும் தமிழ்த்தொண்டையும் பாராட்டி அவர் பெயரால் வழங்கப்பெற்ற பள்ளியிலே நூல்நிலையம் அமைப்பதற்கு வேண்டிய பேழைகளை யும் நூல்களையும் அளித்துள்ளது. டாக்டர் போப் அவர்களும்

தாம் இறப்பதற்குமுன் தமது ஆராய்ச்சிக்குத் தொகுத்து வைத்திருந்த நூல்களனைத்தையும் அப்பள்ளிக்கு அனுப்பி யுள்ளனர் என்பது மிகவும் போற்றுதற்குரியது.

டாக்டர் போப் சிறந்த அறிஞரானதோடு கண்டிப்பும் கட்டுப் பாடும் கடைப்பிடித்து எடுத்துக்காட்டாக விளங்கியஆசிரியராவர். சோம்பேறிகளிடம் பரிவு காட்டமாட்டார். எனினும் மாணவர் களின் அன்பிற்குகந்தவரானுர். மிகவும் அறிவு குறைந்த மாண வனை ஓரளவு அறிவுள்ளவனுக்குவதில் அவர் மிகவும் அக்கறை கொண்டனர். அவர் மாணவர்களை நடத்தி வந்த முறையில் அவர் கொண்ட கருத்தினைக் கேட்டபோது 'நல்ல உணவு, நல்ல படிப்பு, நல்ல பிரம்படி' (good food, good learning, good caning) என்று கூறினுராம். (சில ஆண்டுகட்கு முன்புவரை பள்ளிகளில் நன்கு படிக்காத மாணவர்களைத் தலைமையாசிரியர் பிரம்பினுல் அடிப்பதுண்டு.) திருநெல்வேலி சி. எம். கல்லூரி முதல்வர் தவத்திரு சாஃப்டர் திரு போப் அவர்களின் மாணவ ராவர். அக் கல்லூரி இப்போது சாஃப்டர் உயர்நிலைப் பள்ளி யாக நடைபெறுகின்றது.

சாயர்புரத்திலே அவர் தம் மிகுதியான நேரத்தைத் தமிழ் கற்பதிலும் தமிழிற் புலமை பெறுவதிலும் கழித்தார். தமிழனைப் போலத் திருத்தமாகத் தமிழைப் பேசக் கற்றுக் கொண்டார். தமிழ் பிற சில மொழிகளைப் போல் இலக்கண வரம்பிலா மொழி யன்று என்பதை விளக்கும்.

"கண்ணு தற்பெருங் கடவுளுங் கழகமோ டமர்ந்து
பண்ணு றத்தெரிந் தாய்ந்தவிப் பசுந்தமி ழேனை
மண்ணி டைச்சில இலக்கண வரம்பிலா மொழிபோல்
எண்ணி டைப்படக் கிடந்ததா எண்ணவும் படுமோ"

என்ற திருவிளையாடற் புராணப் பாடற் கருத்தினை எங்ஙனமோ அறிந்தவராய், இலக்கணப் புலமை யில்லாமல் இலக்கியங் கற்பதில் பயனில்லை எனவுணர்ந்தனர். எனவே, அவர் படிமுறையாக முதல் இலக்கண வினுவிடை, இரண்டாம் இலக் கணம், மூன்ரும் இலக்கண நூலாகப் பவணந்தியார் நன்னூல் ஆகிய மூன்று நூல்களை அச்சிட்டு வெளியிட்டார். அவை பள்ளிகளிலெல்லாம் பாடநூல்களாகப் பயன்படுத்தப்பெற்றன. தமிழர் பண்பினையும், பழக்க வழக்கங்களையும் மிகவும் போற்றிப் பாராட்டியதோடு தம் வாழ்க்கையிலும் அவற்றைக் கடைப் பிடித்து ஒழுகி வந்தனர்.

ஒருநாள் டாக்டர் போப் அவர்கள் நாசரத் பக்கமுள்ள பன்னைவிளை ஊருக்குச் சென்றிருந்தபோது தம் நண்பர்

ஞானவுயிர்ப்பிள்ளை வீட்டிலே அவர் மனைவியார் ஒரு செம்பிலே பருகுதற்குத் தண்ணீர் கொடுத்தனர். அவர் அதனை வாங்கி வாய் வைத்துக் குடிக்காமல் அண்ணாந்து குடித்ததோடு செம்பையும் கவிழ்த்து வைத்துத் தமிழர் பண்பாட்டுக்கு எடுத்துக் காட்டாக விளங்கினார்.

1850 ஆம் ஆண்டில் அவர் விடுமுறையில் இங்கிலாந்துக்குச் சென்று திரும்பியபின் தஞ்சையிலுள்ள எஸ். பி. ஜி. சமய நிலையத்திலே பணியேற்றனர். அங்கே புனித பீற்றர் கல்லூரியை நிறுவினர். அஃது இப்பொழுது உயர்நிலைப் பள்ளியாக நடைபெறுகிறது. அங்கே இருந்த காலத்தில் தஞ்சை, கும்பகோணம் ஆகிய ஊர்களிலுள்ள தமிழ்ப் புலவர் களிடம் தமிழிலக்கியங்களைப் பயிலுவதில் மிகுதியான நேரத்தைக் கழித்தார். 1860 இல் தஞ்சையை விட்டு உதகைக்கும் பின்னர்ப் பெங்களூர்க்குஞ் சென்று ஐரோப்பியப் பள்ளிகளை அமைத்து அவற்றின் தலைமையாசிரியராக அமர்ந்து அவற்றைப்போல் சிம்லாவில் பிஷப் காரி உயர்நிலைப்பள்ளி நடைபெறுவதற்கு வழிகாட்டினர்.

ஓய்வுபெற்ற பின் டாக்டர் போப் அவர்கள் ஆராய்ச்சியில் தமது முழுநேரத்தையும் கழித்தார். ஆக்சுபோர்டு பேலியோல் கல்லூரி (Balliol College) யில் தமிழ்ப் பேராசிரியராக அவர் அமர்த்தப் பெற்றார். அங்கே தமிழ் நாட்டில் பணிபுரியச் செல்லும் இளைய சமயப் பணியாளர்கட்கும் ஆட்சி உயரலுவல் (I. C. S.) பார்ப்பதற்குப் பயிலும் மாணவர்கட்கும் தமிழ் கற்பித்தனர்.

ஆக்சுபோர்டு பல்கலைக் கழகத்தினரால் அவர்தம் தமிழ்ப் பெரும்புலமையினைப் பாராட்டி முதுகலை (எம். ஏ.) பட்டமும், சமயநூற் புலமையின் பொருட்டு கான்றர்பரி பிஷப் அவர்களால் (Doctor of Divinity) பட்டமும் அவருக்கு வழங்கப்பெற்றன.

அவர் வரலாற்றாசிரியர் என்பதற்கு தமிழில் அவர் இயற்றிய ‘இந்திய வரலாறு’ (History of India) ‘இங்கிலாந்து வரலாறு’ (History of England) ஆகிய இரண்டும் சான்றாக உள்ளன. அவை பள்ளிகளிற் பாடமாக வைக்கப் பெற்றன. அபாய் டு பாய்சு (Abbe Du Bois) பிரஞ்சு மொழியில் எழுதிய தென்னிந்திய மக்களின் பண்பொழுக்கங்களும், பழக்க வழக்கங் களும் (South Indian Manners and Customs) என்ற நூலைக் கிழக்கிந்தியக் கம்பெனி 2000 வராகன் (பொன் நாணயம்) கொடுத்து வாங்கியுள்ளது. அதில் ஒரு பகுதியை டாக்டர் போப் தமிழில் மொழி பெயர்த்தனர். சென்னை அரசின்

ஆணையின்படி என்ரி பியூச்சேம் (Henry Beauchamp) என்பவர் அதனை வாங்கி எஞ்சிய பகுதியினை மொழிபெயர்த்தியற்றி முடித்துக் கொடுத்தனர்.

தமிழ் இலக்கியங்களிலுள்ள சில பாக்களைத் தொகுத்து ஏற்ற தலைப்புக்களில் அமைத்துத் 'தமிழ்ச் செய்யுட் கலம்பகம்' (Tamil Poetical Anthology) என்ற நூலை முதன்முதல் வெளியிட்டனர். அவர் 1855இல் இயற்றிய தமிழ்க் கையேடு (A Hand book of the ordinary dialect of the Tamil Language) நான்கு பகுதிகளைக் கொண்டதாய்ப் பல பதிப்புக்கள் வெளியிடப் பெற்றது. அது தமிழ் கற்கும் மேலை நாட்டினர்க்குப் பெரிதும் பயன்படுவதாயிற்று.

'ஆலும் வேலும் பல்லுக்குறுதி; நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி'. 'திருவாசகத்துக்கு உருகாதார் ஒருவாசகத்துக்கும் உருகார்' என்ற முதுமொழிகளைக் கேட்டுச் சிந்தித்துகந்த டாக்டர் போப் அவர்கள் முதலாவதாக 1886இல் ஈரடித் திருக்குறளையும், இரண்டாவதாக 1893இல் நாலடி நானூற்றையும், மூன்றாவதாக 1900இல் மணிவாசகப் பெருமான் திருவாய் மலர்ந்தருளிய திருவாசகத்தையும் மொழிபெயர்த்தனர். இம் மூன்றும் ஒன்றன்பின் ஒன்றுக்கு 7 ஆண்டுகள் இடைவெளியமைந்திருப்பதும் போப் அவர்களின் 80ஆவது அகவை நிறைவு நாளாகிய 24-4-1900இல் திருவாசகம் வெளியிடப் பெற்றுள்ளதும் எண்ணி இறும்பூதெய்துதற் குரியனவாகும்.

திருக்குறளை மொழிபெயர்ப்பதற்குமுன் அதன் மூல நூற்படி ஒன்றில் தமது கைப்படச் சீர்பிரித்துக் குறிப்புக்கள் எழுதியுள்ளமையினை முன் இதழில் படித்தீர்கள். அதேபோல் தமிழிலுள்ள நாலடியார் மூலநூற்படியிலும், திருவாசக மூல நூற்படியிலும் தம் கைப்படவே சீர்பிரித்துக் குறிப்புகளை எழுதியுள்ளார்கள். திருக்குறள் மூலப்படியோடு நாலடியாரும் திருவாசகமும் மறைமலையடிகள் நூல்நிலையத்திலே காட்சி நூல்களோடு அரிய மாணிக்கங்களாகப் போற்றி வைக்கப் பெற்றிருக்கின்றன. தமிழ் அச்சு வந்த காலத்தில் பெரும்பான்மையான நூல்களில் செய்யுள்கள் சீர் பிரிக்கப்பெறவில்லை என்பது அரிதற்பாலது.

திருவாசக மொழிபெயர்ப்பு நூல் முன்னுரையில் மாணிக்கவாசகர் வரலாறும் திருவாசகத்தின் பெருமையும், தமிழர் சமயமாகிய சைவசித்தாந்தத் (முப்பொருள்)தின் உண்மையும் தெளிவுற விளக்கப் பெற்றிருக்கின்றன. பின் இணைப்பாக

உள்ள மேற்கோள் விளக்கக் குறிப்புக்களும், சொற்பொருள் விளக்க அகரவரிசையும் கற்பார்க்குக் கழிபேருவகையூட்டுவன வாகும்.

அவர் தமிழர் சமய நூல்களையும் போற்றிப் படித்துள்ளார் என்பதற்கு—அடிக் கோடிட்டு—ஓரக் குறிப்புக்கள் எழுதித் தாம் ஆராய்ந்து படித்த சிவஞான முனிவர் சிற்றுரையோடு கூடிய சிவஞான போதமும், வேதாந்த நூலாகிய உரையோடு கூடிய கைவல்ய நவநீதமும் சான்ருக உள்ளன. அவை மறை மலையடிகள் நூல்நிலையத்தின் நூற்காட்சி யமைப்பிலே மிளிர் கின்றன. கைவல்ய நவநீத நூலின்கண் டாக்டர் கரால் (Dr. Graul) ஆங்கிலத்திலும் செருமனிலும் மொழிபெயர்த்த நூலின் ஏடுகள் இடையிடையே சேர்க்கப்பட்டிருக்கின்றன. அம் மொழி பெயர்ப்புக்களோடு உரையினை அவர் ஒப்பிட்டுப் படித் திருக்கின்றனர் என்று அறியக்கிடக்கின்றது.

டாக்டர் சாமிநாதையரவர்கள் பதித்து வெளியிட்ட சீவக சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, புறநானூறு, புறப் பொருள் வெண்பாமாலை முதலிய நூல்களை அவ்வப்போது பெற்றுப் படித்துத் தமிழ் இலக்கியங்களிலே திளைத்தனர். புறநானூற்றில் சில பாடல்களையும், புறப்பொருள் வெண்பா மாலையில் சில பாடல்களையும ஆங்கிலத்திலே மொழிபெயர்த்து இந்தியப் பழம்பொருள் (Indian Antiquary) இதழிலும், தமிழன் பழம்பொருள் (Tamilian Antiquary) இதழிலும் சித்தாந்த தீபிகை (Siddhanta Deepikai) இதழிலும் வெளியிட்டு வந்த னர். அவற்றைத் தொகுத்துக் கழக ஆட்சியாளர் பவளவிழா விலே "Tamil Heroic Poems" என்ற தலைப்பில் அழகிய பதிப் பொன்று கழக வெளியீடாக வெளியிடப்பெற்றது.

புறநானூறு அவர் மனத்தைப் பெரிதுங் கவர்ந்துள்ள தென்பது அவர் 1904 சனவரி முதல்நாள் தம் நண்பர்கட்கு அச்சிட்டு அனுப்பிய புத்தாண்டு வாழ்த்தில் 'கணியன் பூங் குன்றன்' என்ற செந்நாப்புலவர் பாடிய 'யாதும் ஊரே யாவருங் கேளிர்' என்ற 192-ஆம் புறநானூற்றுப் பாடலும் 1907 சனவரி முதல் அனுப்பிய புத்தாண்டு வாழ்த்தில் மதுரை இளம்பெருவழுதிஎன்றபழந்தமிழ்ப் புலவர் பாடிய 'உண்டாலம்ம இவ்வுலகம்' என்ற 182-ஆம் புறநானூற்றுப் பாடலும் அவரியற்றிய ஆங்கில மொழிபெயர்ப்புடன் காணப்படுகின்றமை யால் நன்கு புலனுகின்றது.

காப்பியங்களில் புத்தமதச் சார்புடைய 'மணிமேகலை' அவர் தம் மனத்தைப் பெரிதுங் கவர்ந்தது. எனவே, அதன்

கதையை உரைநடையில் ஆங்கிலத்திலே எழுதி வெளியிட்டுள்ளனர். டாக்டர் போப் மணிமேகலை கதையினை ஆங்கிலத்திலே மொழி பெயர்க்குங்கால் 'ஆபுத்திரன் திறம் உரைத்தது' என்னும் 13 ஆம் காதையின்வழிப் 'பழங்காலந் தொட்டுப் பண்பாடு நிறைந்த தமிழ்க் குடிமக்களிடம் குல மத வேறுபாடுகளை ஆரியர் புகுத்தியுள்ளனர் என்பதை யுணர்ந்து வருந்தலானுர். எனவே அக் காதையின் கருத்தை யொட்டிய 'கபில ரகவல்' என்ற பிற்கால நூலையும் மொழிபெயர்த்துள்ளனர்.

டாக்டர் போப் தமிழ்ச் சொற்களஞ்சியம் தொகுப்பதிலும் மிக்க ஆர்வத்தோடு ஈடுபட்டிருந்தார். சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேரகராதிக்கு டாக்டர் போப் எழுதி வைத்திருந்த தமிழ் ஆங்கில அகராதி வாயிலாக இருந்தது. டாக்டர் உவின்சுலோ (Dr. Winslow) 1862-இல் வெளியிட்ட தமிழ் ஆங்கில அகராதியில் காணப்பெருத சொற்களைத் தாம் சேர்த்துக் கொடுப்பதாகவும் தமிழ் அகராதியைச் சென்னை அரசுக்காகத் தமது பொறுப்பில் ஆக்சுபோர்டு கிளாரண்டன் அச்சகத்திலே அச்சிடலாமென்றும் அதற்கு வேண்டிய பொருளுதவியினை ஐந்தாண்டு வரை செய்துதரல் வேண்டுமென்றும் டாக்டர் போப் அவர்கள் விரும்புவதைத் தவத்திரு கேனன் செல் (Canon Sell) அவர்களும் திவான்பகதூர் சர் சுப்பிரமணிய ஐயர் அவர்களும் சென்னை அரசுக்கு 1905 மே திங்கள் தெரிவித்தனர். அரசும் ஆண்டொன்றுக்கு ரூ. 6000/-விழுக்காடு 5 ஆண்டுகட்குப் பொருளுதவி அளிப்பதாகக் கட்டளை பிறப்பித்தது. எனினும் அத் திட்டம் பின்னர்க் கைவிடப்பட்டது. டாக்டர் போப் தாம் தொகுத்து வைத்திருந்த சொற்களஞ்சியத்தைச் சென்னைப் பல்கலைக் கழகத்துக்கு அனுப்பி வைத்தனர். அதனையும் பயன்படுத்திச் சென்னைப் பல்கலைக் கழகவழித் தமிழ்ப் பேரகராதி (Tamil Lexicon) 6 பகுதிகளாக 1935இல் வெளியிட்டு முடிக்கப்பெற்றது.

டாக்டர் போப் ஆங்கிலம் தமிழ் ஆகியவற்ருேடு செருமன், மலையாளம், கன்னடம், தெலுங்கு மொழிகளையும் கற்றவர், அவர் மொழித்துறை, வரலாற்றுத்துறை, சமயத்துறை ஆகிய மூன்றிலும் புலமை மிக்கவர். அவர் மொழிபெயர்த்த 'மலைச் சொற்பொழிவு' (Sermon on the Mount) என்ற கட்டுரை நான்கு திராவிட மொழிகளிலும் வெளிவந்திருக்கின்றது. தோதவர்கள் (Todas) பேசுந் தோத மொழிக்கு டாக்டர் போப் இயற்றிய தோத இலக்கணம் (Toda Grammar) கர்னல் மார்ஃசல் (Colonel Marshall) எழுதிய தோதவர் வரலாற்று நூலில் பின் இணைப்பாகச் சேர்க்கப்பட்டுள்ளது. அவர்

இயற்றிய இலத்தீன் பாடநூல் வரிசை சென்னைப் பல்கலைக் கழகத்தினரால் பாட நூல்களாக அமைக்கப்பெற்றது. ஐரோப்பிய மாணவர்கள் உவகையோடும் கிளர்ச்சியோடும் அவற்றைக் கற்று வந்தனர். அவர் திருச்சபைகளில் ஆற்றிய அருளுரைகளும் பல பொருள்கள்பற்றி எழுதிய கட்டுரைகளும் அறிக்கைகளும் சில இதழ்களில் வெளிவந்திருக்கின்றன.

அவருடைய கீழை நாட்டு மொழிப் புலமையினைப் பாராட்டி 1859-ல் அவரைச் சென்னைப் பல்கலைக் கழகம் சிறப்புறுப்பினர் (Fellowship) என ஏற்றுக் கொண்டது. அரசுரிமை பெற்ற ஆசிய கலைக்கழக (Royal Asiatic Society) மும் 1870இல் லெயிப்சிக் கீழ்கலைக் கழக (Leipzic Oriental Society)மும் அவரைத் தங்கள் கழக உறுப்பினராக தேர்ந்தெடுத்தன.

ராயல் ஆசிய கலைக்கழகம் கீழ்கலைப் புலமையினைப் பாராட்டி மூன்று ஆண்டுக் கொருமுறை தங்கப்பதக்கம் வழங்குவதுண்டு. 22-6-1906இல் டாக்டர் போப் அவர்கட்கு மாண்பு மிகு இந்தியத் தலைமைச் செயலர் (Secretary of State for India) திரு மார்லி என்பவரால் அப் பதக்கம் வழங்கப் பெற்றது.

"கிறித்தவ சமயத்தைப் பரப்பச் சென்றவர் சென்ற இடங்களிலுள்ள மக்களோடு நன்கு பழகி அவர்களுடைய பழமையான மொழியினை நன்கு கற்று நூல்கள் எழுதி, நம்மவர்கட்குப் புதுப்புது நல்லுணர்வுகளை வழங்கியுள்ளனர். நல்லவர் ஒருவர் எப்போதும் தாம் பழகுகிறவர் எந்த மொழி பேசுபவராக இருப்பினும் அவரோடு அன்பாக இருத்தல் வேண்டும் என்பது டாக்டர் போப் அவர்களின் தனித்த இயல்பு" என்று திரு மார்லி கூறித் தங்கப் பதக்கத்தைக் கூடியிருந்தவர் கை தட்டொலி, பாராட்டொலிகள் முழங்க வழங்கினர்.

தமிழ்நாட்டுக்கும் தமிழ்மொழிக்கும் நீண்டகாலமாக அவர்களைப்போல் உழைத்துதவியவர்களில்லை என்றால் அது மிகையாகாது. தமிழ் மக்களோ தமிழ்நாட்டுப் பல்கலைக் கழகமோ போதுமான அளவுக்கு அவர்களைப் பாராட்டவோ நன்றிகாட்டவோ இல்லை என்பது உண்மை. ஆங்கிலப் பல்கலைக் கழகமும், மேலைநாடுகளின் இலக்கியக் கழகங்களும் அவர்தம் தமிழ்ப் புலமையினைப் பாராட்டும்போது நமது சென்னைப் பல்கலைக்கழகம் பாராட்டாமல் இருந்தது வருந்துதற்குரியதே.

டாக்டர் சாமிநாதையரவர்கட்கும், சித்தாந்த தீபிகை ஆசிரியர் சிவத்திரு. ஜே. எம். நல்லசாமி பிள்ளை அவர்கட்கும் டாக்டர் போப் எழுதிய கடிதங்களிலுள்ள குறிப்புகள் கீழே தரப்படுகின்றன. அவை அவருக்குத் தமிழ் மொழிமீதும் தமிழ்

மக்களிடத்தும் தமிழர் பண்பிலும் தமிழ் இலக்கண இலக்கியங்களிலும் எத்துணை மதிப்பும் அன்பும் தாம் இறக்கும்வரை வைத்திருந்தனர் என்பதை நன்கு எடுத்து விளக்கும். அக் குறிப்புகளை அடியில் கண்டு மகிழ்க.

1895 அக்டோபர் திங்கள் டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கட்கு எழுதியது:

"தாங்கள் பதிப்பித்த 'புறப்பொருள்' இங்கேயுள்ள தமிழ் நூல்கள் அடங்கிய நூல்நிலையத்திலே இருக்கிறது. அதனை மொழிபெயர்த்து முடிப்பதற்கு முயல்கின்றேன்.

"நானும் பலவற்றைச் செய்யத் திட்டம் வகுத்து வருகின்றேன். ஆனால் தாங்களோ இளைஞர்; யானோ முதியவன்.

"ஒருபொழுதும் வாழ்வது அறியார் கருதுப
கோடியும் அல்ல பல"

மிகவும் நலமில்லாமல் இருக்கிறேன், ஆனாலும் இன்னும் சிலவற்றைச் செய்தல் வேண்டுமென்று அவாவுகின்றேன்.

"உங்களுடைய பதிப்பு கலப்பில்லாததாயும் நிறைவுடையதாயும் இருக்கிறது. ஆனால் புதிதாய்த் தமிழ் கற்கப் புகுவார்க்குப் பழந்தமிழ் மிகவும் ஏற்புடைத்தாயிருக்கும்படி இடைநிரப்புதல் வேண்டும். எல்லாவற்றையும் யாவரும் புரிந்து கொள்ளும்படி செய்தல் வேண்டும்"

இக் கடிதவழி அவர் புறப்பொருள் வெண்பாமாலையினை மொழிபெயர்த்துத் தமிழன் பழம்பொருள் (Tamilian Antiquary) இதழுக்கும் சித்தாந்த தீபிகை இதழுக்கும் அனுப்பியுள்ளனர் என்பது தெரியவருகின்றது.

3-1-1896இல் எழுதிய கடிதம் (சிதைவாயுள்ளது):

"நீண்ட நாட்களாகத் சங்கட்குக் கடிதம் எழுதக் கூடவில்லை. நோயாலும் இடவிடா வேலையாலும் எழுதவில்லை. அதனைப் பொறுப்பீர்களாக. 'புறநானூறு' 'புறப்பொருள் வெண்பாமாலை' ஆகிய இரண்டையும் ஒன்றாகவே வைத்து ஆராய்ந்து வருகின்றேன். சிலப்பதிகாரம் முழுமையும், அகநானூறும் வேண்டும். கலித்தொகை மனத்தைக் கவர்கின்றது. மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் வரலாறு கட்டாயம் எழுதப் பெறுதல் வேண்டும்.

"தாங்கள் அனுப்புகிற நூல்கட்கு உடனுக்குடன் பணம் அனுப்பி வைப்பேன். என்னுடைய பழந்தமிழ் ஆராய்ச்சி நிறைவுறுதற்குத் தங்களுடைய உதவி பெரிதும் வேண்டப்படும். தொல்காப்பிய உரைப் பதிப்புகட்கு விளக்கக் குறிப்புகள் கட்டாயம் வேண்டும்"

6—6—1898 இல் எழுதிய கடிதம் :

"திருவாசகத்தை யான் மொழிபெயர்க்க முற்பட்டபோது, அதில் சில இடங்களில் ஓசை தவறாக இருப்பதைக் கண்டேன். அல்லது ஆசிரியர் மிகத் தெளிவான இசைச் செவியோடு அதை இயற்றியிருக்க வேண்டும். இருப்பினும் பல இடங்கள் சிதைந்திருக்குமென்றே கருதுகின்றேன். ஆனாலும் அவற்றைத் திருத்த விரும்பவில்லை. தமிழ்ப்புலவர்கள் இதைப்போன்ற சிறந்த இலக்கியங்களின் மூல பாடங்கள் முழுவதையுமே செப்பஞ் செய்யவேண்டுமென்ற கருத்தை மட்டும் யான் கூறவிரும்புகின்றேன். படி எடுக்கும்போது கையெழுத்துப் படிகளில் பிழைகள் நுழைவது இயற்கையே. காட்டாக எண் 18 குயிற் பத்து வரி 2 இல் 'பாதாளம் என்பதற்கு ஈடாகப் 'பாதலம்' என்ற சொல் இருக்குமேயானல் ஓசை கெடாதிருக்கும். இது மிகச் சிறிய தவறு. ஆனல் இதைப் போல் இருபது பிழைகள் இருப்பதைக் கண்டேன்.

"திருவள்ளுவர் தான் 'குறள் வெண்பா' பாவினத்தை முதன்முதல் கண்டுபிடித்தவர் எனக் கருதுகின்றேன். அவருக்குமுன் அப்பாவினத்தில் வேறெவரும் எழுதியதாகத் தெரியவில்லை. அவருக்குப்பின்னும் சிலர் அம்முயற்சியில் இறங்கியும் எவரும் அவரை விஞ்சவில்லை என்றே கூறலாம்.

"தமிழ் இலக்கியத்தைப்பற்றி விரிவாக எழுத விரும்புகின்றேன். திருமூலரையும், பட்டினத்துப்பிள்ளையையும் சென்னையிலிருப்பவர்கள் மிகவுஞ் சிறப்பாகப் பேசுகிருர்கள். ஆனல், அவற்றைப் பேரிலக்கியங்களாகக் கருத முடியுமா? பெருங்காப்பியங்களில் சிலப்பதிகாரம், சூளாமணி, சீவகசிந்தாமணி ஆகியவற்றைத் தவிர வேறு என்ன உண்டு? "மூதுரை" போன்ற நீதி நூல்களுக்குப் பட்டி ஒன்று வேண்டும். என்னிடம் சில நூல்கள் இருக்கின்றன.

"வைணவ இலக்கியமாகிய திருவாய்மொழியைப் படித்து வருகின்றேன். மெய்கண்டதேவர் சிவஞானபோதம் என்னுடைய நேரத்தை மிகவும் கவர்கின்றது. அஃது அரிய பல விழுமிய கருத்துக்களைக் கொண்டது".

5—3—1899 இல் எழுதிய கடிதம் :

"இது சித்தாந்த தீபிகை ஆசிரியர் திரு நல்லசாமி பிள்ளையவர்கட்கு எழுதப்பெற்றது".

"மிகப் பழைய தமிழ் நூலான புறநானூற்றைக் கும்பகோணம் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகவுள்ள திரு சாமிநாதையர் மிக நன்ருகப் பதிப்பித்துள்ளார். அவர் பதிப்பித்துள்ள ஐந்தாவது பெரிய நூல் இது. தமிழ்ப் புலவர்கள் ஒவ்வொருவர் இல்லத்திலும் இடம் பெறும்படி மிகவும் கவனத்தோடும் உழைப்போடும் ஆராய்ச்சிக்கு வேண்டிய குறிப்புகளையெல்லாஞ் சேர்த்துப் பதிப்பித்துள்ளார். இந்நூல்களைப் பதிப்பிக்க அவர் காட்டுகின்ற ஆர்வமும் எடுத்துக்கொண்ட உழைப்பும் அவருக்கு ஐரோப்பிய அறிஞர்களிடம் உயர்ந்த இடத்தைப் பெற்றுத் தந்துள்ளன.

"மிகப் பழமையான, வளமான தூய தமிழ்மொழி வேறெந்த மொழிக்கும் தாழ்ந்த தன்று. பிரித்தானியப் பேரரசின் எங்கோ ஒரு மூலையில் வாழும் மக்கள் பேசுகின்ற பண்படாத மொழி என்று பெரும் பாலோர் அதைக் கருதுகின்றனர். நம்முடைய இந்திய அரசோ, அல்லது நம் பல்கலைக்கழகங்களோ தமிழ் இலக்கியத்தின் பெருமையை யும் சிறப்பையும் இதுகாறும் உணரவில்லை. தென்னிந்திய இலக்கியங்களைப் பயில்பவர்கள் ஆழ் கடலில் மூழ்கி முத்தெடுப்பவர்கட்கு ஒப்பாவர்''

திரு. ஜே. எம். நல்லசாமிப் பிள்ளைக்கு 1899 சூன் திங்களில் எழுதிய கடிதம்:

"மெய்கண்டதேவர், அருணந்தி சிவம், மறைஞான சம்பந்தர், உமாபதிசிவம் ஆகிய சந்தானகுரவர் அருளிய 'கடவுள், உயிர், உலகம்' என்னும் முப்பொருள் உண்மைகள் என் மனத்தைப் பெரிதுங் கவர்ந்தன.

"தங்களிடமும் மற்றுந் தென்னிந்திய மக்களிடமும் யான் வைத் துள்ள அன்பும் அவர்கள் நலத்தின்பொருட்டு என் வாழ்த்துகளும் எத்தகையவென யான் விளக்க வேண்டியதில்லை.

"எஞ்சிய என் வாழ்நாளைத் தமிழுக்காகவே உழைப்பேன். *மறு உலகம் புகுந்த பின்னரும் அங்குள்ள பண்புடைய தமிழ் மக்கள் சிலரோடு தமிழிலேயே பேசி அளவளாவி மகிழ்வேன். யான் எழுதிய நூல்களை இப்போதைவிட மிகுதியாகப் பரப்புவீர்கள் என்ற நம்பிக்கை யோடு இதனை எழுதுகின்றேன்.''

5-5-1899இல் திரு. வே. சாமிநாதையரவர்கட்கு எழுதிய கடிதம்:

"சில நாட்களுக்கு முன் எனது உருவப்படமொன்று தங்கட்கு அனுப்பி வைத்தேன். திருவாசக மொழிபெயர்ப்பு அச்சிடப்பெறு கின்றது. மாணிக்கவாசகரின் எண்ணங்களை எவ்வளவு தெளிவாக

---

*நெல்லையிலுள்ள ஆவியுலகத் தொடர்பாளர் (Medium) திரு. இரா. ந. குற்றாலலிங்கம் பிள்ளைவழி 1959 மே முதல் மறைத்திரு மறைமலை யடிகளாரும் ஆவியுலகில் வாழும் அறிஞர் குழுவினரும் வாழ்த்துகளும், கட்டுரைகளும் அனுப்பி வந்தனர். அவற்றிற் சில செந்தமிழ்ச் செல்வி இதழ்களில் வெளியிடப்பெற்றன. 1960 இறுதியினும் 1961 முற்பகுதி யிலும் 'கருக்கல்' என்ற தலைப்பில் ஒரு நாடகம் எழுதப்பெற்று வந்தது. அந்த நாடகம் முற்றுப்பெறுமலிருக்கிறது. மறைமலையடிகள், பண்டிதமணி கதிரேசச் செட்டியார், நாவலர் வேங்கடசாமிநாட்டார், சி. வை. தாமோதரனார், பேராசிரியர் சுந்தரம்பிள்ளை, கழக அமைச்சர் திருவரங்கனாரும் அவர் தம் மனைவியார் நீலாம்பிகையம்மையாரும், சாந்தம்மையார் (மறைமலையடிகள் மனைவியார்), டாக்டர் போப் ஷரோ (கைரேகை அறிஞர்) ஆகியோர் அந்நாடக உறுப்பினர்களாவர்.

'மேலுலகத்திற்குச் சென்ற பின்னரும் அங்குள்ள தமிழ் மக்களோடு தமிழில் பேசி அளவளாவுவேன்' என்று டாக்டர் போப் தெரிவித்துள்ளது உண்மையாக நிகழ்ந்துவருதலை நம்பி மகிழ்வோம்.

எடுத்துக்கூறமுடியுமோ அந்த அளவுக்கு ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளேன். ஆங்கில அறிஞர்களும் படித்தறிந்து போற்றுமளவிற்கு முக்கிய செய்திகளனைத்தையும் தொகுத்துக் கொடுத்துள்ளேன். தாங்கள் பதிப்பித்துள்ள சிவகசிந்தாமணி, புறநானூறு, சிலப்பதிகாரம், மணிமேகலை, புறப்பொருள் வெண்பாமாலை, மற்றும் நூல்களின் வழி எனது ஆராய்ச்சிக்குத் துணைபுரிந்த தங்கட்கு என்ன கைம்மாறு செய்ய வல்லேன் என்பதை என்னால் எழுதக்கூடவில்லை.

"எனக்கு ஓய்வு கிடைக்கும்பொழுதெல்லாம் மணிமேகலையைப் படிக்கிறேன். சிலம்பும் சிந்தாமணியும் சமணக் கொள்கையைச் சார்ந்திருப்பதுபோல் மணிமேகலை புத்தமதக் கொள்கையைத் தழுவியுள்ளதெனக் கருதுகின்றேன். போதிய உடல் நலமிருக்குமானால் ஆங்கிலத்தில் மணிமேகலையைப் பற்றி ஒரு சிறுநூல் எழுத விரும்புகின்றேன். என்னுடைய நூல் இந்தியாவில் எந்த அளவு விற்பனையாகுமென்று தெரியவில்லை. இங்கிலாந்திலோ ஒன்றும் எதிர்பார்ப்பதற்கில்லை. தமிழ் நண்பர்கள் எனக்கு உதவி செய்வார்கள் என்று நம்புகிறேன்.

"நீங்கள் நலமின்றி இருப்பது தெரிந்து வருந்துகின்றேன். என்னைப் போல் 'இலக்கியப் பணியே நீண்டகாலம் வாழ்வதற்கு நல்ல மருந்து' (Literary Work is a Capital Medicine) என்று தாங்களும் கருதுவீர்கள் என்று நம்புகிறேன்.

தாங்கள் தமிழ் இலக்கியங்களை மேன்மேலும் வெளியிடுவதற்கு நீண்ட காலம் வாழும்படி வேண்டுகிறேன்."

மணிமேகலைகதை இவரால் ஆங்கில உரை நடையில் எழுதப் பெற்று வெளிவந்திருக்கிறது. சில ஆண்டுகளுக்கு முன் டாக்டர் போப் தம் ஆசிரியரோடு ஆக்சுபோர்டு பேலியோல் கல்லூரி உள்முற்றத்தில் உலாவிக் கொண்டிருக்கும்போது நிகழ்ந்த உரையாடலைத் தமது திருவாசக மொழிபெயர்ப்பு நூலின் முன்னுரையில் எழுதியிருப்பதை இங்கே எடுத்துரைப்பது பொருத்தமாகும்.

"இப்போது என்ன செய்து கொண்டிருக்கிறாய்? என்று என் ஆசிரியர் கேட்டனர். அதற்கு யான் 'தமிழ்ப்பழங்கதைகள், இலக்கியங்கள் முதலியவற்றில் ஈடுபட்டிருக்கிறேன் என்றேன். அவர் திடுமென 'நீ அதனை அச்சிடுதல் வேண்டும்?' என்று கூறினர். அதற்கு யான் இயல்பாகத் தெரிவித்த விடை "ஐயா இறைவன் எனக்கு இறவாமைக்கான பட்டயம் வழங்கவில்லையே, எடுத்துக்கொண்ட வேலை முடிவதற்கு நீண்ட காலம் வேண்டுமே" என்பதாகும். அடுத்து அவர் என் தோளின்மேல் தமது கையை வைத்து, "அப்பா, பெரியதொரு பணியை முன்னிருத்திக் கொண்டால் நீண்ட காலம் வாழ்வதற்கு அதுவே வழியுண்டுபண்ணும். எடுத்த பணியை முடிக்குமட்டும் நீ வாழ்வாய்" என்று அறிவுறுத்தினர். அதன் உண்மையை அப்போது உணராவிடினும் அவர் கூறிய அருள்வாக்கு யான் சோர்வடையும் போதெல்லாம் நினைவுக்கு வந்து ஊக்க மூட்டியதோடு, அவர் பிரிவுக்குப் பின் யான் எடுத்துக்கொண்ட பணிகளெல்லாம் நிறைவுபெற்று எனக்கு உண்மையுணர்த்திற்று."

இதிலிருந்து எடுத்துக்கொண்ட அரியதொரு பணியை முடிப்பதன் பொருட்டு இறைவன் ஒரு சிலர்க்கு முன்னரே வகுக்கப்பெற்ற வாழ்நாளை மேலும் சில காலத்துக்கு நீட்டித்துள்ளான் என்பதை விளக்க எனக்குத் தெரிந்த மற்றொரு நிகழ்ச்சியினை இங்கே எடுத்துரைக்க விரும்புகின்றேன்.

கோவை சிவக்கவிமணி சி. கே. சுப்பிரமணிய முதலியாரவர்கள் சேக்கிழார் திருத்தொண்டர் புராண விரிவுரையினை ஏழு பகுதிகளாக வெளியிட்டமை அரியதொரு சிறப்பு மிக்க பணி என்பதை யாவரும் நன்கு அறிவர், அவர்கள் மறைமலையடிகள் நூல்நிலையத்தை 22—9—1958 இல் பார்ப்பதற்கு வந்திருந்தனர். டாக்டர் போப் திருவாசக ஆங்கில மொழி பெயர்ப்பு நூலின் முன்னுரையில் எழுதியிருக்குஞ் செய்தியினை யான் எடுத்துரைக்கவும் அவர்கள் வியந்து தம் வாழ்நாளும் அங்ஙனமே குறிப்பிட்ட காலத்துக்குமேல் திருவருளால் நீட்டிக்கப்பெற்ற வரலாற்றைக் கூறி வியப்பும் மகிழ்வும் பெறச் செய்தனர்.

தம்முடைய பிறந்தநாள் குறிப்பின்படி தமது வாழ்நாளில் இன்னின்ன காலங்களில் இன்னின்ன நிகழும் என்று சோதிடர் சொன்னபடி மாற்றமேதுமின்றி நிகழ்ந்தன. ஆனால் தமது வாழ்நாள் முடிவுமட்டும் குறித்தபடி நிகழாமல் தாம் எழுதத் தொடங்கிய பெரிய புராண விருத்தியுரை ஏழு பகுதிகளும் முடிவு பெறும்வரை ஏழாண்டு கட்குமேல் நீடித்தது. தம் கண்களில் இன்பநீர் துளும்பத் "திருவருட் செயல் இருந்தவாறென்னே" எனப் புகழ்ந்துரைத்தனர்.

டாக்டர் போப் அவர்களும் பெரியபுராணத்தை விரும்பிக் கற்றுச் சில நாயன்மார் வரலாறுகளை ஆங்கிலத்திலே மொழி பெயர்த்துள்ளார்.

டாக்டர் சாமிநாதையரவர்கட்கு அனுப்பிய 1904 புத்தாண்டு வாழ்த்துடன் வந்த கடிதம் :

"யான் வாழ்கிறேன் என்பதும், தென்னிந்திய நண்பர்களிடம் யான் மிக்க மதிப்பினை வைத்திருக்கிறேன் என்பதும் இதன்வழி நினைப்பூட்டு கின்றேன். இதனை எழுதும் வரை மிகவும் உடல் நலமின்றியிருந்தேன். இதன்கண் உள்ள பாடலின் மொழிபெயர்ப்பினைப் படித்தின்புறுவீர்கள்."

தமிழ்ப் பேரறிஞர் டாக்டர் போப் அவர்கள் 25—12—1907இல் சித்தாந்த தீபிகை ஆசிரியர் ஜே. எம். நல்லசாமிபிள்ளை அவர்கட்கு எழுதிய கடிதம் :

தாம் பேலியோல் கல்லூரியின் தொழுகை (கோயில்) யிடத்திலே 26—5—1907 இல் ஆற்றிய கடைசி அருள்வாக் (செவியறிவுறூஉ - Last Sermons) கோடு தம் கைப்பட எழுதிய

கிறித்துமஸ் வாழ்த்துக் கடிதம். அவர்தம் இந்தியத் தமிழ் நண்பர்கட்கும், அறிஞர்கட்கும் மகிழ்ச்சிதரக்கூடியதாகும்.

"என் அன்பிற்குரிய நண்பர் அவர்களே,

என் இதயத்திலிருந்து எழுந்த இறுதி அருள் வாக்கிலே தமிழ்த் திருவாசகத்திலும் சிவஞானபோதத்திலும் காணக்கிடக்கும் உண்மைகள் ஒத்திசைந்திருக்கின்றன. யான் பழுத்த கிழவனுகியுள்ளேன். கடவுள் உங்கட்கும் உங்கள் உற்ருர் உறவினர் நண்பர்கட்கும் அருள் புரிவாராக".

இக்கடிதத்துடன் அனுப்பப் பெற்ற அருள்வாக்கு (செவியறிவுறூஉ) 1908 பிப்ரவரி சித்தாந்த தீபிகை தொகுதி 8 பகுதி 2 இல் 8 பக்க அளவில் வெளிவந்துள்ளது.

அருள் வாக்கிலுள்ள இறுதி வரிகள்

"O Grave, where is thy Victory!
O Death, where is thy Sting!"
ஏ கல்லறையே, எங்கே உனது வெற்றி !
ஏ இறப்பே, எங்கே உனது கொடுக்கு !

மேலேயுள்ள கடிதங்களினல் தமிழ்மொழி ஒன்றையே கற்ற டாக்டர் சாமிநாதையரவர்களின் தமிழ்ப் பெரும்புலமையும் மேனுட்டறிஞர்களும் பாராட்டும் வகையில் ஆராய்ச்சி முன்னுரை, மேற்கோள் விளக்கம், உரை விளக்கம், சொற்களஞ்சியம் ஆகியவற்ருேடு அச்சிட்டு வெளியிட்டுவருந் திறமையும் பல மொழி கற்ற டாக்டர் போப் உள்ளத்தைப் பெரிதுங் கவர்ந்துள்ளன என்பதும், அதனுல் அவர்பால் ஆரா அன்பும் மாரு மதிப்பும் வைத்துள்ளனர் என்பதும் நன்கு விளங்குகின்றன வல்லவா ?

இருவர் வரலாறுகளிலும் சில ஒப்புமை நிகழ்ச்சிகள் காணப் பெறுவது மகிழ்ச்சி தருவதாகும்.

டாக்டர் போப் 1820 ஏப்ரல் **திங்களிலே** பிறந்து தமது **88 ஆம் அகவையில் 1908 பிப்ரவரித் திங்களிலே** மறைந்தார். டாக்டர் சாமிநாதையரோ **1855 பிப்ரவரித் திங்களிலே** பிறந்து தமது **88 ஆம் அகவையில் 1942 ஏப்ரல் திங்களிலே** மறைந்தார்.

தடித்த எழுத்துக்களிலுள்ள சொற்களைக் கொண்டு ஒப்புமை யறிந்து மகிழ்வீர்களாக.

டாக்டர் போப் தமது இறுதிக் காலம் 1908 வரை தமிழின் மீதும் தமிழ் மக்களின்மீதும் அவர் கொண்ட ஆரா அன்பினுல்

அவர் தம் சொல்லும் செயலும், பேச்சும் மூச்சும் 1837 முதல் தண்ணுர் தமிழிலேயே தோய்ந்திருந்தது. தமிழ் உயர்தனிச் செம்மொழி என்றும் அது பிற மொழியினின்றும் கடன் வாங்காமல் விளங்கும் ஆற்றல் உடையதென்றும் கூறிவந்தார்.

"தக்கார் தகவில ரென்ப தவரவர்
எச்சத்தார் காணப் படும்"

என்ற திருவள்ளுவர் பொய்யா மொழிக்கு எடுத்துக்காட்டாக வாழ்ந்தவர் நம் பெருமதிப்புக்குரிய டாக்டர் போப் அவர்களாவர் என்பதை ஈண்டு எடுத்துரைப்பது பொருத்தமாகும்.

"தந்தை மகற்காற்றும் நன்றி யவையத்து
முந்தி யிருப்பச் செயல்"

"மகன்தந்தைக் காற்றும் உதவி இவன்தந்தை
என்னோற்ருன் கொல்லெனுஞ் சொல்"

என்னும் பொய்த்தலில்லா குறள் மணிகட்கு எடுத்துக்காட்டாகத் தந்தையும் அவர் தம் அறிவறிந்த ஆண்மக்கள் மூவரும் விளங்கினர் என்பது அறிந்து மகிழ்தற்குரியது.

மூவரில் மூத்தவர் திரு ஜான் வி போப் பர்மாவில் பள்ளிக் கல்வி இயக்குநராகவும், அடுத்த மகனு் திரு லெப்டனன்ற் கர்னல் டி. எச். போப் (ஐ. எம். எஸ்.) சென்னை கண் மருத்துவமனையின் தலைமை மருத்துவராகவும், அதற்கடுத்த மூன்ருமவர் திரு ஏ. டபிள்யு. உ. போப் (சி. ஐ. இ.) இந்தியப் புகை வண்டிப் போக்கு வரவு மேலாளராகவும் பின் இந்தியாவை விட்டுச் சீனப் பேரரசின் புகை வண்டிப் போக்கு வரவு மேலாளராகவும் பணிபுரிந்து தந்தைக்குப் புகழ் ஈட்டித் தந்தனர். மேலும் தம் மக்களோடு தாம் தொடங்கி வைத்த கல்வி நிலையங்களும், எழுதிய நூல்களும் புகழ் மிக்க எச்சங்களாகும்.

தமிழ்நாட்டில் கிறித்தவ சமயத்தைப் பரப்ப வந்தவர்களில் ஒருவர் கத்தோலிக்க சமயப் பரப்புநர் (Catholic Missonary) புனிதத் தந்தை பெஸ்கி என்னும் வீரமாமுனிவர் ஆவர். அவர் திருக்குறள் முதல் இரண்டு பால்களையும் இலத்தினில் மொழி பெயர்த்ததோடு தொன்னூல் விளக்கம், சதுரகராதி, தேம்பாவணி முதலிய நூல்களை எழுதித் தமிழ் முனிவர் போன்று உடையணிந்து வாழ்ந்தவர்.

மற்ருெருவர் புரோடெஸ்டண்டு சமயப் பரப்புநர் (Protestant Missionary) டாக்டர் போப் அவர்களாவர். இவ்விருவரும் என்றும் தமிழ் மக்கள் நன்மதிப்புக்கும் நன்றிக்கும் உரியவர்களாவார்கள்.

—வ. சு.

(தொடரும்)

தமிழில் எழுதுவோம்

[ஆட்சிச் சொற்காவலர் கீ. இராமலிங்கனுர், எம். ஏ.]

(முன் பரல் ௧௮௮ஆம் பக்கத் தொடர்ச்சி)

4. பரிவு மனம் தேவை

வரலாற்றுக் காலத்துக்குப் பல்லாண்டுகளுக்கு முன்பிருந்தே, தமிழ் ஆட்சி புரிந்து வந்தது என்னும் எழுச்சிதரும் உண்மையை யறிந்து உளம் மிக மகிழ்ந்தோம். அங்ஙனம் ஆட்சி செய்த காலத்தின் பெரும் பரப்பைக் காணும்போது, அண்மையில், ஆங்கிலம் தமிழகத்தில் ஆட்சி செய்த காலம் புறக்கணிக்கத்தக்க மிகமிகச் சிறிய அளவினதேயாகும். இச் சின்னஞ் சிறு காலத்தில் ஏற்பட்ட ஆட்சி மொழி மாற்றத்தால், நமக்குத் தமிழின்பால் இயல்பாக இருக்கவேண்டிய பரிவுள்ளம் பறிபோகும்படி விட்டுவிடக்கூடாது.

இன்று எல்லாத் துறைகளிலும், எல்லாச் செயல்களுக்கும், தமிழ் ஆட்சிமொழியாவதில் காணக்கூடிய தயக்கமும் தவக்கமும், இப் பரிவின்மையினுலேயே ஏற்படுகின்றன. பிற ஏதுக்கள் தடைகளாக இடை நின்ருலும், அவற்றை ஆர்வம் நிறைந்த மனம், எதிர்நின்று வென்றுவிடக்கூடும். ஓர் அலுவலகத்திலுள்ளவர்கள் — மேலிருந்து கீழ்வரை—அனைவரும், ‘யாவற்றையும், தமிழிலேயே எழுதிவிட வேண்டும்,’ என்னும் பரிவுள்ளம் பெருகியவர்களாக மாறிவிட்டால், பொருத்தமான சொற்களும் அவற்றைப் பெய்து எழுதும் பொலிவான வரைவுகளும் குறிப்புகளும், தாமாகவே தக்கனவாக அமைந்துவிடும் என்பது திண்ணம். அங்ஙனம் அமைவதில் தொடக்கத்தில் சில குறைகள் இருந்தாலும், நாள் செல்லச் செல்ல, அவை முற்றும் நல்லவண்ணமாகத் திருந்தி விடும் என்பதில் ஐயம் ஏதும் இல்லை.

1951இல் என்னைத் திருச்சிராப்பள்ளி நகராட்சி ஆணையராக மாற்றினர்கள். அதற்கு இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்பிருந்தே, திருச்சி மாவட்டத்திலுள்ள அரசு அலுவலகங்களில், ஆட்சி மொழியாகத், தமிழைப் பயன்படுத்திப் பார்க்க வேண்டும் என்று அரசாணை பிறந்திருந்தது. ஆட்சிச் செய்திகளைத் தமிழில் எழுதுவது எளிதாக இருக்கிறதா என்று காணவே, அரசு இந்தத் திட்டத்தைக் கொண்டுவந்திருந்தது. அப்படியே, ஆந்திரப் பகுதியில் மேற்குக் கோதாவரி மாவட்டத்தின் அரசு அலுவலகங்களிலும் தெலுங்கை ஆட்சி மொழி

யாகப் பயன்படுத்திப் பார்க்கவேண்டும் என்றும், அரசு ஆணை யிட்டிருந்தது. அது சென்னை மாநிலம், ஆந்திர மாவட்டங்களை யும், தன்னகத்தே கொண்டிருந்த காலம்.

நான் அலுவல் ஏற்றதும், என் அறையில், கோப்பு (file)கள் குவிந்திருந்ததைக் கண்டேன். மேலும் பெட்டி பெட்டியாகக் கோப்புகள் என் அறைக்கு வந்து கொண்டும் இருந்தன. எனக்கு முன்பு, அங்கு ஆணையராக இருந்தவர் ஒரு கிழமைக்கு முன்பே, வேலை ஒப்புவித்துவிட்டுப் போய் விட்டிருந்தார். எனவே, கோப்புகள் பெருகியிருந்தன. கோப்பு களை விரைந்து பார்த்து முடித்துவிட வேண்டும் என்று அமர்ந் தேன். கையில் எடுத்த ஒவ்வொரு கோப்பும் ஆங்கிலத்தி லேயே எழுதப் பெற்றிருந்தது. ஒன்றுகூடத் தமிழில் இல்லை. ஒன்றையும் முடிவு செய்யாமல், அலுவலக மேலாளரை (Office Manager) அழைத்துவரச் சொன்னேன். திரு அரங்கநாதர் வந்தார்; கேட்டேன், அரசின் ஆணையை ஏன் பின்பற்ற வில்லை யென்று. ''தமிழில் எழுத முடியவில்லை,'' என்றார் தயக்கத் துடன். 'ஒவ்வோராண்டும் அரசினருக்கு, இதுபற்றி, அறிக்கை அனுப்பியிருக்க வேண்டுமே' என்றேன். ''ஆம், 'முயல்கிறோம், முடியவில்லை' யென்று எழுதுகிறோம்'' என்றார்.

கோப்புகளை, உரிய எழுத்தர்களிடமே, திருப்பித் தரச் சொல்லி விட்டு, அன்று மாலையே, அலுவலகப் பணியாளர் களைக் கூட்டித், தமிழில் எழுதுவதில் பரிவு மனம் கொள்ளுமாறு வேண்டினேன். மறுநாளே தமிழில் எழுதிய கோப்புகள் வரத் தொடங்கின. குறிப்புகளும் வரைவுகளும் (Notes & Drafts) தமிழிலேயே இருந்தன. புரிகின்ற தமிழாகவே அவை அமைந் திருந்தன. மேலாளர் திரு. அரங்கநாதரும் தம் குறிப்புரைகளை ஒவ்வொரு கோப்பிலும் தமிழிலேயே வரைந்திருந்தார். அவர் தாய் மொழி சௌராட்டிரம். தெலுங்கு, உருது, மலையாளம், இவற்றைத் தாய் மொழியாகக் கொண்ட பல பணியாளர்களுங் கூட, நல்ல தமிழில் குறிப்புகளையும் வரைவுகளையும் எழுத லாயினர். தமிழில் எழுதத் தங்களுக்கு இவ்வளவு வளமை எங்கிருந்து திடீரென வந்துவிட்டது என்று அனைவருமே வியந்தனர். அஃது அரசு ஆட்சிச்சொல் அகராதியை வெளி யிடாதிருந்த காலம். சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் 'ஆட்சிச் சொல் அகரவரிசை' பயன்பட்டது.

ஓர் எழுத்தர் பின் வருமாறு ஒரு குறிப்பு எழுதினார்:

''மேல் நிலை எழுத்தர் திரு. சக்கரபாணி விருதுநகருக்கு உதவிப்பங்கீட்டு அலுவலராகச் சென்றிருக்கிறார். ஓர் ஆண்டு

லீவும் இங்குள்ள பணியில் ஓர் ஆண்டுக்கு லீனும் பெற்றுச் சென்ருர். மேலும் ஓர் ஆண்டு லீவும் லீனும் கோருகிருர் ஆணைக்கு.''

இக் குறிப்பில் 'லீவ்' 'லீன்' இவையே பிறமொழிச் சொற்கள். இவற்றிற்கு நேரான தமிழ்ச் சொற்கள் தெரியாமை யால், ஆங்கிலச் சொற்களை அப்படியே பெய்து எழுதிவிட்டார். இக் கோப்பின் மீது, நான் பின் வருமாறு எனது முடிவை எழுதினேன்.

''ஓர் ஆண்டு விடுப்பு (லீவ்) அளிக்கலாகிறது. மேலும் ஓர் ஆண்டு ஊன்று (லீன்) அளிக்க, மன்றத்தின்முன் குறிப்பு வைக்க.''

விடுப்பை ஆணையரே அளித்து விடலாம். ஊன்று, நகர் மன்றந்தான் தரவேண்டும். 'விடுப்பு' 'ஊன்று' என்னும் சொற்கள், பிறகு அலுவலகம் முழுதும் பரவிவிட்டன. இவ் வாறே, பலப்பல புதுத் தமிழ்ச் சொற்களை, நாளாவட்டத்தில் பணியாளர்கள் தெரிந்துகொண்டு பயன்படுத்தலாயினர். தமிழில் எழுதவேண்டும் என்று அலுவலகத்திலுள்ள அனை வரும் பரிவு மனம் பூண்டு விட்டதால், முடியாதன வெல்லாம் முடியக் கூடியனவாகக் காட்சி யளித்தன. ஒழுங்கு நடவடிக் கைக் கோப்புகளும் தமிழிலேயே வரையப் பெற்றன. சட்ட வழுக்கள் நேர்ந்துவிடும் என்னும் அச்சத்திற்கே இட மில்லாதிருந்தது.

கையாடல் குற்றத்திற்கு ஒருவரை வேலையிலிருந்து நீக்கி வைக்க (Suspend செய்ய) வேண்டி ஏற்பட்டது. முறைப் படியான நடவடிக்கைகளுக்குப் பின், அவரை வேலையிலிருந்து தள்ளிவிட (Dismiss செய்ய) வேண்டியதுமாயிற்று. நீக் காணை (Suspension Order), தள்ளாணை (Dismissal Order) இவற்றை அலுவலகத்தில் ஓர் எழுத்தர் வரைவு செய்தார்.

அரசினருக்கு அவர் முறையீடு (Appeal) செய்தபோது, இக் கோப்பு அரசினர் பார்வைக்குச் சென்றது. நீக்கி வைத்த தற்கும், தள்ளி விட்டதற்கும் பிறப்பித்த தமிழ் ஆணைகளிலோ பிற தமிழ் வரைவுகளிலோ சட்டக்குறையேதும் இருந்ததாக அரசினர் கூறவில்லை. பிறகு, அவர்மீது தண்டனை மன்றத் தில் (Magistrate's Court) குற்ற வழக்குத் தொடர்ந்த போதும், அவரை அம் மன்றம், மாவட்ட மா நடுவர் மன்றத் தின் (Dt. Judge's Court) தீர்ப்புக்கு அனுப்பிய போதும், அவ்விரு மன்றங்களும், தமிழ்க் கோப்பைப் பார்வையிட்டன.

தண்டனையரோ, மாநடுவரோ, தமிழ் வரைவுகளைப்பற்றி ஏதும் குறை சொல்ல வில்லை; பாராட்டினர். பரிவு மனத்தோடு தமிழில் எழுத முற்பட்டுவிட்டால் அறிவும் ஆற்றலும் பூத்துப் பொலிகின்றன என்பதும் குறை நேர்வது அரிது என்பதும் கண்கூடு.

இவ் வுண்மையை அரசின் தலைமைச் செயலக (Head Office of the Government) மாகிய அமைச்சகத்தின் (Secretariat) கல்வித்துறையில் சிறக்கக் காணலாம். இப்பொழுது அமைச்சகத் துறைகளில் முதற்படித் தமிழ்த் திட்டமே செயற் பட வேண்டும் என்பது அரசாணை. தமிழில் எழுதும் பொது மக்களுக்குத் தமிழில் விடை வரைய வேண்டும் என்பதே அத் திட்டம். எனினும், கல்வி அமைச்சகத்தில் (Education Secretariat) பல வகைக்கும் தமிழைப் பயன்படுத்துகின்றனர். குறிப்புகளும் தமிழில் வரையப் பெறுகின்றன. இளநிலை உதவி யர்கள் (Junior Assistants), உதவியர்கள் (Assistants), பிரிவு களின் அலுவலர்கள் (Section Officers), உதவிச் செயலர்கள் (Asst-Secretaries), துணைச்செயலர்கள் (Dy. Secretaries) யாவரும் தமிழிலேயே எழுத முனைகிறார்கள். இத் துறைக்குமட்டும் தமிழில் வரைவது பற்றித் தனியே ஓர் அரசாணை பிறப்பிக்கப் படவில்லை. பின் என்ன காரணம், தமிழுக்கு இத் துறையில் இவ்வளவு சிறப்பு ஏற்பட்டிருப்பதற்கு.

இத் துறையின் செயலர் திரு. கே. திரவியம் இ. ஆ. ப. (I. A. S.) அவர்கள் ஒரு தமிழ்ப் பெருமகனார். தமிழின்பால் பரிவுமனம் பூண்டவர். கோப்புகளில் தமிழிலேயே தம் முடிவுகளை எழுதுபவர். அப் பரிவுமனப் பாங்கு, அத் துறையி லுள்ள அனைவரிடமும் தமிழ் ஆர்வம் ஊற்றெடுக்கும்படி செய்து விட்டிருக்கிறது. ‘மனம் இருந்தால் வழி யுண்டு’ என்னும் பழமொழி, இத் துறையில் எத்துணை உண்மையாக விளங்கு கின்றது என்பதைக் காணலாம்.

சட்டப்படி தமிழில் எழுதவேண்டிய அளவுகூட சில அலு வலகங்களில் எழுதாமல் இருப்பதற்குக் காரணம், பரிவு மனம் இன்மையேயாகும். அலுவலகத் தலைவர்கள் அனைவரும், எல்லா மேல் அலுவலர்களும், தமிழில் எழுதுவதில் பற்றுள்ளம் கொண்டு விடுவார்களாயின், ஆட்சி மொழிச் சட்டத்திற்கு வேலையே இராது. இளைஞர்களாயுள்ள பணியாளர்கள் தமிழில் எழுதுவதில் ஆர்வமுடையவர்களாக இருக்கின்றனர் என்பதை நமது மாநில முழுதிலுமுள்ள அலுவலகங்களை ஆட்சிமொழி தனி அலுவலராகச் சென்று பார்வையிடும் வாய்ப்புப் பெற்றிருந்த

போது நன்கு அறிவேன். வயதானவர்களும், மேல்நிலை அலுவலர்களும், மனம் மாறிவிட்டால் பரிவுள்ளம் பூண்டுவிட்டால், தமிழ் ஆட்சி மிக விரைவில் முழுவெற்றி பெற்றுவிடும் என்பது முற்றிலும் உண்மை.

சென்னைப் பல்கலைக் கழகம் ஒரு தனி நிறுவனம். எனவே அரசலுவலகங்களுக்கான தமிழ் ஆட்சிமொழிச் சட்டம் அந் நிறுவனத்தைச் சட்டப்படி கட்டுப்படுத்தாது என்றாலும், அதன் அலுவலகங்கள் அனைத்துக்கும் பெருந் தலைவராகவும், துணை வேந்தராகவும் விளங்கும் தாமரைத்திரு நெ. து. சுந்தரவடிவேலு அவர்கள், தமிழில் எழுதுவதில் பரிவு மனம் கொண்டவர். அந் நிறுவனத்தில் பேரவைக் (Senate) கூட்டத்திற்கான பொருள் நிரலைத் (Agenda) தமிழில் வரைந்தளித்திருக்கிறார். இந் நிறுவனத்தில் 116 ஆண்டு வரலாற்றில் இப்போதுதான், தமிழ், ஓரளவு இதன் ஆட்சிமொழியாகி யிருக்கிறது. இங்ஙனம் இப்பல்கலைக்கழகத்தில் தமிழ் ஆட்சிமொழியாக்குவதற்குக் கால்கோள் செய்துள்ள இத் தமிழ்ப் பெருந்தகையார், இனி படிப்படியாக இக் கழகத்தின் எல்லாத் துறைகளிலும் தமிழைப் பயன்படுத்த வழிகோரிவிடுவார் என்று மகிழலாம்.

அண்மையில், தொழில் வணிகப் பெருந்திருவினர் பொள்ளாச்சி நா. மகாலிங்கம் அவர்கள் தலைமையில் நடக்கும் ஓர் அலுவலகத்தின், ஆட்சிமொழி, தமிழாக இருப்பதை யறிந்து அகங்களித்தேன். கடிதப் போக்குவரவு யாவும் தமிழிலேயே நடப்பதுடன், அலுவலகக் குறிப்புகளும் அழகான தமிழில் எழுதப் பெறுவதையும் அவற்றின்மீது அழகு அழகாகத் தலைவர் அவர்கள் தம் கருத்துக்களையும் முடிபுகளையும் தமிழில் வரைவதையும் கேட்டு உளந்துளும்பினேன். அக் குறிப்புகளில் சிலவற்றை ஈண்டு எடுத்துப் பொறித்து வைத்தால் அவை மற்றோர்க்கு முன்னெறியாக (Model) விளங்குமே யெனவும் விரும்பினேன். இடம் பெருகிவிடுமே யெனும் அச்சம், இடைப்படுகிறது.

அரசின் ஆட்சிமொழிச் சட்டம் அந்த அலுவலகத்து வரைவுக் குறிப்பு மொழி, தமிழாக இருந்தாக வேண்டும் என்று விதிக்க வில்லை. அது அரசு அலுவலகம் அன்று எனினும் வள்ளல் அவர்களின் தமிழ்ப் பரிவே, அவ் வலுவலகத்தின் கடிதப் போக்குவரவுக்கும் குறிப்புக்கும் பயன்படுத்தும் மொழியைத் தமிழாக மாற்றிவிட்டிருக்கிறது. அலுவலகச் செய்திகளைச் சட்டப்படி தமிழில் கட்டாயம் எழுதியாக வேண்டிய எத்தனையோ அரசலுவலகங்களில், இன்னமும் தமிழில் எழுது

வதில் தயக்கம் இருந்து வருவதைப் பார்க்கும்போது, சட்டத்தால் கட்டுப்படாத நிலையிலும், தாமே விரும்பித் தமிழைத் தம் அலுவலகத்தில் தண்ணளியோடு பயன்படுத்தும் தமிழ்ப் பெருமானர் போற்றற்குரியவராகின்ருர்.

தமிழைப் பரிவோடு போற்றிப் பிறமொழியில் இருந்த தம் பெயர்களையே தமிழில் மாற்றி வைத்துக் கொண்ட மூவரது அருஞ்செயலை இங்கே குறிப்பது, தமிழில் எழுதுவோர்க்கு ஊக்கம் அளிக்கும். கிறித்தவக் கல்லூரியில் தமிழாசிரியராக இருந்தார், திரு சூரியநாராயண சாத்திரியார். அப் பெயர் அவர் பெற்றோர் அருமையாக இட்டது. என்ருலும், அவர், தமிழின்மீது கொண்டிருந்த பற்றினல், தம் பெயரைப் 'பரிதி மாற்கலைஞன்' என்று மாற்றி வைத்துக்கொண்டார். சூரியன்-பரிதி, நாராயணன்-மால், சாத்திரியார் - கலைஞன்.

வங்காளச் சட்டமன்றத் தலைவராக இருந்த பேரறிஞர் திரு சுனீத்குமார் சாட்டர்சி, வங்காளத்தில் வல்லவர்; சமற்கிருதத்தில் புலமை படைத்தவர்; தமிழையும் ஓரளவு நுணுகிப் பயின்ருர். தமிழ்மொழி அவரது உள்ளத்தை ஈர்த்தது. தம் பெயரைத் தமிழில் குறிக்க வேண்டும் என்று விழைந்தார். 'நன்னெறி முருகன்' என்று வைத்துக் கொண்டார். சுனீத்—நன்னெறி, குமார்—முருகன். 'சாட்டர்சி' என்பது அவரது இனத்துப் பட்டம். தமிழ், இன வேறுபாட்டைக் கண்டிக்கும் மொழியாதலின், இந்த இனப்பட்டத்தை தமிழ்ப் படுத்திக் கொள்ள விரும்பவில்லைபோலும்.

இவர் 'பூசை' என்னும் சொல் பூ செய்தல் என்னும் பொருளில் இருப்பதைத் தமிழர்க்கு நினைவூட்டியவர். பூவைச் சொரிந்து வழிபடுவது பூசை. நன்செய்—நஞ்சை, புன்செய்—புஞ்சை, குடிசெய்—குடிசை. போல, பூ செய்—பூசையாயிற்று என்னும் சொல் வரலாற்றை எடுத்து விளம்பியவர்.

உருசியா (Russia)விலிருந்து, திரு ரூதியா செம்பியர் என்னும் தமிழ் அறிஞர் ஒருவர், அருள்திரு தனிநாயக அடிகளாருக்குத்—தமிழில் ஓர் அழகான மடல் வரைந்திருந்தார். அதன் தலைப்பில் 'சோவியத் ஒன்றியம்' என்று தம் நாட்டின் பெயரைக் குறித்திருந்தார். 'Union' என்பதற்கு இனிய தமிழ்ச் சொல் 'ஒன்றியம்' என்று, பிறகே அரசினர் ஆட்சிச் சொல் அகராதியில் சேர்க்கப் பெற்றது. அதற்கு முன்பு 'ஒன்றிப்பு' என்று நான் ஆக்கி வழங்கி வந்த சொல்லை, 'ஒன்றியம்' வென்று விட்டது. இத் தமிழ்ப்பற்ருளர், தம் பெயரை அம் மடலின் ஈற்றில் ஒப்பமிடும்போது 'ரூதியா

செம்பியர்' என்று உருசிய ஓசையில் இடாமல், உறுதியன் செம்பியன்' என்று நல்ல தமிழ் வடிவில் அதனை ஆக்கி அமைத்து எழுதியிருந்தார். என்னே! இவரது தமிழ்ப் பரிவு மனம்!

'தமிழில் எழுதினால், ஆங்கிலத்தில் வரைவது போல அமையாது பொருட் செறிவு குன்றிவிடும். படிப்பவருக்கும் விளங்காது, தமிழில் பொருத்தமான சொற்கள் காணமுடியாது. கண்டாலும் அவை, அனைவர்க்கும் புரியாது, தமிழில் எழுதுவதற்கு, ஆங்கிலத்தில் வரைவதற்குப் பிடிக்கும் நேரம் போலப் பல மடங்கு நேரம் பிடித்து விடும்,' என்றெல்லாம் வீணாக இன்னமும் குறை கூறிக் கொண்டிருப்பதை நம்மவர்கள் விட்டுவிட வேண்டும். பல ஆண்டுகளுக்குப் பின்பு முதன் முதலாக நமது மொழியில் எழுதும் வாய்ப்பு நமக்குக் கிட்டியதே என்று மகிழ வேண்டும். இவ்வாய்ப்பு நமக்கு முன்பிருந்த தலைமுறையினருக்குக் கிட்டவில்லை. இனிவரும் தலைமுறையினருக்கும் கிட்டுவதாகாது என்பதை உணர வேண்டும். வரும் கால்வழியினருக்கு நாம், தமிழ் வரைவு, குறிப்பு வரைவதில் முன்மாதிரியாக இருக்கும் பேறு கிடைக்கப் பெற்றோமே என்று உளம் பூரிக்க வேண்டும்.

பின் வருபவர்கள், நாம் வரைபவற்றைப் பேணிப் படித்து, அவர்கள் எழுதுபவற்றிற்கு முன்னெறியாக அவற்றைப் பயன் படுத்திக் கொள்ள வேண்டுமே என்னும் ஆர்வத்துடன், அழகழகாக, இனிய தமிழில், வரைவுகளையும் குறிப்புகளையும் எழுதிக் குவிக்க ஆவல் கொள்ள வேண்டும். ஆட்சி மொழி இலக்கியத்தை உருவாக்கும் பொறுப்பு இக்காலத்தில் வாழும் நமக்கு உரியதாகின்றதை உன்னிப் பெருமிதம் அடைய வேண்டும்.

இவ்வாறான, பரிவு துதைந்த தமிழ் மனத்தை அலுவலகங்களிலுள்ள 'அனைவரும் வளர்த்துக் கொண்டு விட்டால், எந்த வகை இடரையும் பொருட்படுத்தாமல் தமிழ் எல்லா அலுவலகங்களிலும் இனிது ஆட்சி புரியும் என்பது திண்ணம்.

———

(தொடரும்)

ஆப்பிரிக்கச் சுற்றுலா

[கவியோகி சுத்தானந்த பாரதியார்]

(சிலம்பு-௪௮, பரல்-௩, ௧௮௦ஆம் பக்கத் தொடர்ச்சி)

9. திருவிழா முழக்கம்

சைவசித்தாந்த சங்கத்தில் திருமணங்கள் சிறப்பாக நடக்கும். செயலுக்கேற்ற காணிக்கை சேரும். அது சமயப் பணிக்குச் செல்லும். திருமணச் சடங்குகள் தமிழிலேயே நடக்கும். சமயநூல்கள், அறிக்கைகள் அனைவருக்கும் அளிக்கப் படும். திருக்கார்த்திகை, கிறித்துநாள், தீபாவளி, பொங்கல், குருபூசை நாட்கள் சிறப்பாக நிகழும். எனது யோகசித்தி நாளையும் கொண்டாடினர். அன்று எனது யோகானுபவங்களை இரண்டு மணி நேரம் பேசினேன்.

கிறித்துநாள் நள்ளிரவில் அன்பர் கூடினர். வெள்ளையரும் சிலர் வந்தனர். சுற்றிலும் கிறித்துக் கோயில்களில் பியானோ வுடன் தீங்குரல்கள் இசைத்தன. நாங்களும் இசைக் கருவி களுடன் பாடிச் சிவபெருமானுக்கு வழிபாடு செய்தோம். ஆங்கிலப் பாட்டு முதலில் :

Jolly new year, come, happy new year,
Gone is past fear, we give you good cheer
Ding dong ding dong bell
To the effete old farewell
Let us hail jehova
Let's adore mahadeva
We invoke almighty grace
For the peace of the human race
Let's unite soul to soul
To sing hallolujah for all !

இந்தப் பாட்டு மறுநாளே டர்பான் முழுதும் ஒலித்தது. இத்துடன் ஒரு தமிழ்ப் பாட்டும் முழங்கியது.

புதுநலமே புதுயுகமே வாவா
பொன்னொளிரப் புன்னகைத்து வாவா
மதுமயக்க மாயையற வாவா
மங்கலங்கள் பொங்கிவர வாவா

மறுமலர்ச்சிக் கலைகுலுங்க வாவா
வாழ்வினிலே பால்பொழிய வாவா
வறுமைபிணி துயரொழிய வாவா
வளம்பெருகும் இளந்திருவே வாவா !

பண்முழங்கிப் பரவசமாய் வாவா
பாருலகம் ஒன்றுபட வாவா
கண்குளிர மனங்குளிர வாவா
காலசக்தி முத்தமிட வாவா !

சிறுசிறு குழந்தைகளும் வாவா.......என்று மழலை மிழற்றின. இவ்வாறு எளிய பாடல்களினுல் தமிழுக்கு நல்ல ஆக்கமும் ஊக்கமும் நோக்கமும் தூக்கின. மறுநாள் இசைக் கருவி களுடன் அப்பரும் ஏசுநாதரும் என்ற கதை செய்தேன். ஏராளமான அன்பர் கேட்டு மகிழ்ந்தனர். தேவாரங்களைக் கொண்டே பைபிள் கருத்தை விளக்கினேன். டர்பான் ஜோஹான்ஸ்பர்க்கு, கேப் டவுன் முதலிய நகரங்களில் தங்கப் பளபளப்புடன் மின்விளக்கணிகள் தெருக்களிலும் மாளிகை களிலும் கண்கொள்ளாக் காட்சியாயிருந்தன. அந்த மாதம் முழுதும் கிறித்துசமயப் பாடல்கள் காற்றை நிரப்பின.

நாங்களும் பல இடங்களில், கோயில்களிலும், இந்துக்கள் வாழும் சூழல்களிலும், கூடங்களிலும், அற்புதத் தேவாரங் களைப் பாடி ஐந்தெழுத்தை முழக்கி இரவில் சமயத் தொண்டு பரவினேம்.

கார்த்திகைத் திருவிழா - இலிங்கநாதம் :

கார்த்திகைத் திருவிழா கண்கொள்ளாக் காட்சியானது. சைவசித்தாந்த சங்கக் கோயில்களில் சரவிளக்குகள் பளிச் சிட்டன. திருவண்ணுமலைத் தீபம்போலச் சிவலிங்கத்தை விளக்கணி செய்தோம். இசைக் கருவிகளுடன் இனிய கூட்டப் பாடல்கள் முழங்கின.

"கார்த்திகை தீபம் கண்டவர்க் கெல்லாம்
கர்ம வினைகள் போமே
மருள் துடைக்கும் தீபம் அருள்தீபம் எங்கள்
அண்ணுமலைத் தீபமே"

என்று எல்லாரும் பாடும்போது தமிழ் தெரியாதவர்களும் "டீபமே" என்று உடனிசைத்தனர். அன்று நல்ல கூட்டம். இலிங்க தத்துவம்பற்றி அன்பர் விளக்கம் கேட்டனர். கேள்வி போட்டனர். இலிங்க வழிபாட்டைக் கேலிசெய்து இந்து

மதத்தையே இழிவுறுத்தும் பலர் உலகெங்கும் இருந்தனர். அங்கும் சிலர் இலிங்கத்தை ஆண்பெண் குறியிணைப்பு என்று நகையாடினவரும் இருந்தனர். எத்தனை நூல்கள் இலிங்கத்தை நகையாடி எழுதப்பட்டுள்ளன தெரியுமா? சிவநேசச் செல்வர்களே! கேளுங்கள். இந்தியாவை Land of the Lingams (இலிங்கநாடு) என்ற முழுவசை நூல் 500 பக்கங்களில் மிகப் பெரிதாக இதோ உள்ளது. ஆங்கிலத்தில் படித்திருக்கிறீர்களா? இந்து சமயத்தைத் தூற்றுவோர்க்கு இலிங்கம் எளிதானது. நான் ஒரு நாட்டில் சுற்றுலா நடத்திப் புகைவண்டியில் முதல் வகுப்பு மேல் வரிசையில் வந்துகொண்டிருந்தேன். கீழே இரண்டு வெள்ளைக்காரர் (ஆணும் பெண்ணும்) கையில் ஒரு பிரெஞ்சு நூலை வைத்துக்கொண்டு சிரிப்பதும் குடிப்பதும் படிப்பதும் இடிப்பதும் துடிப்பதுமாயிருந்தனர். நான் புத்த பிக்குபோல மஞ்சள் அங்கி பூண்டிருந்தேன். எட்டிப்பார்த்தேன்; இலிங்கப் படம் தெரிந்தது. கீழே குதித்தேன். முதலில் என்னை முட்டாள் என்று நினைத்து இடிஇடி என்று சிரித்து ஒரு பெக் விஸ்கி போட்டார். நான் பிரெஞ்சில் பேசியதும் திகைத்தனர். ''ஏன் இந்த இடியிடிச் சிரிப்பு'' என்று வினவினேன். ''பாரும் இந்தப் படம்... இதுதான் இந்துமதம்.... ''லிங்கம்....லிங்கம்'' என்று பாடினர். நான் நூலைப் பார்த்து மனம் கொதித்து...''இதை எழுதினவன் ''முட்டாள் முட்டாள்'' கேளும் உண்மையை. உம் மண்டை இலிங்க வடிவு. அஃது ஆண் குறியா?'' என்று தொடங்கிப் படம் வரைந்து இலிங்க தத்துவத்தை விளக்கினேன்.

அதே நூலில் நாமத்தையும் திருநீற்றையும் தூற்றியிருந்தது. திருநீறு என்றால் சாணி - நாமம் பெண்குறி என்று முழுக்கேலி செய்தனர். அதற்கும் பிரெஞ்சில் விளக்கம் கூறினேன். நீங்களும் தெரிந்து கொள்ளவேண்டும். ஆகம சாத்திரத்தில் இலிங்க விளக்கம் காண்க.

ஜோதிர் மந்த்ர ஸ்வரூபாய
நிர்மலஞ் ஞான சக்ஷுஷே
நம: சிவாய சாந்தாய
ப்ரஹ்மணே லிங்க மூர்த்தியே

''ஒள்ளிய மந்திர வடிவம்; தூயஞான விழிக்கே துலங்கும். அமைதிக் கடவுள் ஐந்தெழுத் தண்ணல் – அவன் உருவமே இலிங்கம் அறிக. ''வாயிலார் மனக்கோயிலில் இலிங்கத்தை நாட்டினார். இலிங்கத்தின் அடிமும்மை ஆத்தும தத்துவம்'' அது சென்று சென்று நுண்மையாகத் தேய்ந்து தேய்ந்து

அகல மும்மையான வித்தியாதத்துவத்திற் கூடும். அஃது அகன்றகன்று சிவதத்துவத்தில் இலிங்க உருக் கொண் டிலகும் "மானிடர் யாக்கை வடிவு சிவலிங்கம்" என்னும் திருமந்திரம். ஒரு மனிதன் கையைக் குவித்துப் பக்கச்சார்பில் அமர்ந்தது போலும் சிவலிங்க உருவம்.

ஆத்தும தத்துவம் ஆவடை யாக
வித்தியா தத்துவம் விரிந்ததன் மேலே
சிவசக்தி யாகத் திகழும் இலிங்கம்
தோன்றி ஒடுக்கும் ஆன்ற வடிவமே

மாணிக்கவாசகர் "இன்றெனக் கருளி" என்ற பாட்டில் இலிங் கத்தையே உருச் செய்துள்ளார். சென்று சென்று அணுவாய்த் தேய்ந்து தேய்ந்து ஒன்றுவது ஆன்ம தத்துவமே. அதில் படிப்படியாக ஐம்பூதங்கள், ஐந்து தன்மாத்திரைகள், ஐந்து வினைப்பொறிகள் (கருமேந்திரியம்) ஐந்து உணர்பொறிகள் (ஞானேந்திரியம்), மனம், புத்தி, சித்தம், அகங்காரம் ஆகிய நான்கு அந்தக்கரணங்கள் (உட்கருவிகள்) இவை நுணுகி நுணுகி வித்தியா தத்துவத்தில் பொருந்தும். வித்தியா தத்துவம் என்பது காலம், கலை, அராகம், புருடன், மாயை, நியதி, வித்தை ஆகிய ஏழுமாம். இவை அகன்று விரிந்து சிவதத்துவத்தைத் தாங்கி நிற்கும். சுத்த வித்தை, ஈசுவரம், சாதாக்கியம், சக்தி (நாதம்), சிவம் (விந்து) இந்த ஐந்தும் சிவதத்துவமாகும் என்று படம் போட்டுக் காட்டினேன்.

நாம் முப்பட்டையாகத் திருநீறிடுவது பதி பசு, பாசம் ஆகிய முப்பொருளுண்மையின் அறிகுறியாகும். வைணவரின் நாமம் இடாபிங்களா சுழுமுனை நாடிகளின் அறிகுறியாம். சுழுமுனை தீவண்ணம் ஆதலால் செங்கோடானது. இவ்வளவும் அந்தப் பிரெஞ்சுக்காரருக்கு அறிவுறுத்தியதும் அவர்கள் குறித்துக் கொண்டு மகிழ்ச்சியடைந்து அந்தப் பொய் நூலை ஒதுக்கினர். என்னுடன் அவர்கள் ஹாங்காங்கில் ஒரு வாரம் தங்கிச் சைவ சித்தாந்தம் கேட்டறிந்தனர். நம்மிடம் தத்துவ வித்தகச் சொத்துள்ளது. அதை அள்ளி வழங்கும் உள்ளம் இல்லை; உள்ளம் இருப்பவருக்கு உதவும் வள்ளல் இல்லை. பிற சமயங்கள்போல் அருளாளருக்கும் பொருளாளர் உதவினுல், உலகெல்லாம் சைவசமயமே சமயம் என்று முரசுகொட்டலாம்.... ஆம் ஆம்!

இவ்வாறு இலிங்க தத்துவம் சொல்லும்போது வைணவர் ஒருவர் திருவண்ணமலைக் கதையில் திருமாலைச் சிறுமைசெய்த தாக நொந்து கேட்டார். திருவாசகத்தில் எம்பாவாய் என

முடியும் பாவைப் பாட்டுள்ளது. அது மகளிர் விளையாட்டுப் பாட்டே. மாயத்தில் உறங்கும் ஆன்மாக்களைச் சிவசைதன்யம் பெற எழுப்பும் பாடல்களே திருவெம்பாவையாம். ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும் சோதியைப் பாடும் அப் பாட்டில் "அண்ணுமலையான் அடிக்கமலம்" என்று வருவதால் இது திருவண்ணுமலையிற் பாடப்பட்டது என்பர் பலர்; "சீதப்புனலாடி சிற்றம்பலம் பாடி" என்றதால் திருச்சிற்றம்பலத்தைக் குறிப்பர் சிலர். "ஐயாறமர்ந்தானைப் பாடுதுங்காண்" என்பதால் திரு ஐயாற்றையும் கொள்வர்.

இதில் "மாலறியா நான்முகனும் காணுமலையினை நாம் போலறி வோம் என்று உள்ள பொக்கங்களே பேசும் பாலூறு தேன் வாய்ப் படிறீ" என்ற வரிகளை மறுத்துத் திருமாலைத் தாழ்த்துவ தாகச் சிலர் கூச்சலிடுவர். "படிறீ" பொய்யளே என்று மணிவாசகரே இடித்துக் கூறுகிருர். நான் ஒரு பாவை மாநாட்டிற்குத் தலைமைதாங்கியபோது இவருக்கும் அவருக்கும் இடியடிதடி ஏற்பட்டது. உண்மையை விளக்கினேன்.

"போதும் . கூச்சல். மாணிக்கவாசகரே "போலறிவோம் என்று பொக்கங்கள் பேசும் படிறீ" என்று இடித்துக் கூறுகிருர். இவ் வரிகளின் உட்பொருள் வெளிப் பொருளாளருக்கு விளங்காது. வேறுபாடுரைப்பது படிருகும். மெய்ப் பொருளை உணருங்கள்.

மால் அறியா = மயக்கம் அறியாத மாயையிற்சிக்காத, ஆணவம் கன்மம் மாயைத் தளையிற் படாத - நான்முகன் நாற்புறமும் ஊன்றிப்பார்க்கும் அறிவாளியும் காணரியமலை. வேதத்தில் "அத்ரிஜாரிதம்ப்ரஹத்" மலையின் உண்மை மிகமிகப் பெரிது, விரிந்தது. அலைவற்று நிலைத்த மனமே மலையாகும். அந்த மலை சுத்தாத்ம சிவமேயாகும். அதை நாற்புறமும் சுற்றிப் பார்த் தாலும் புலனுகாது, காணுது; புறத்திசைகளில் அம் மலை இல்லை. மால் ஆகிய மயக்கம் ஒழிந்து, தற்போதம் ஒழிந்து, சிற்போதம் எழுந்த உள்ளறிவாளருக்கே மலைவற்ற சிவதத்துவம் புலனுகும்" என்பதே கருத்து; விரிப்பின் பெருகும். இதை விளக்கும்போது அனைவரும் ஆரவாரமுடன் "உண்மை உண்மை" என்று "அரிஅர சிவசிவ" முழக்கம் செய்தனர். இரண்டு மணி நேரம் சிவலிங்க விளக்கம் செய்து சிவலிங்க நாதம் என்ற பாட்டைப் பாடினேன். இரண்டாயிரம் மக்கள் என்னுடன் சேர்ந்து பாடினர். அதை மறுநாளே அச்சிட்டனர். (22-10-72) அதற்கென ஒரு கூட்டமுங்கூடி பாட்டை இசைக் கருவிகள் பல தொடர முழக்கினர். இலிங்கம் பிழைத்தது!

சைவம் தழைத்தது. இந்த இலிங்க நாதம் அப்படியே செல்வியில் வருகிறது; பாடுங்கள்.

சிவலிங்க நாதம் :

சிவசிவ சிவஎனப் பணிவோம்
சிவலிங்கத்தினை அணிவோம்
அர அர அர என ஆர்ப்போம்
அன்பு லிங்கத்தைத் துதிப்போம்

ஓம் சிவகுருபர லிங்கம் - இந்த
உலகெங்கும் நிலவிடும் லிங்கம்
சாம்ப சதாசிவ லிங்கம் - சுத்த
சச்சிதாநந்த சிவலிங்கம்

ஆதி பரம்பர லிங்கம் - எங்கள்
அகமொளிர் ஆத்தும லிங்கம்
சோதி சுத்தானந்த லிங்கம் - திருத்
தொண்டரைக் காத்திடும் லிங்கம்

மரண பயமொழித்த லிங்கம் - அன்று
மார்க்கண்டர்க் கருளிய லிங்கம்
அருணகிரியில் வளர் லிங்கம் - ஓம்
அற்புதச் சிற்பர லிங்கம் (சிவ சிவ)

மாணிக்க வாசக லிங்கம் - அப்பர்
மனமணியாகிய லிங்கம்
தோணி யப்பரெனத்தோன்றி - ஞானந்
தோய்ந்த பாலளித்த லிங்கம் (சிவ சிவ)

சுந்தரர்க் கருளிய லிங்கம் - ஆத்ம
சுதந்தர சமரச லிங்கம் - திரு
மந்திர மூலர் வணங்கும் - மிக
மகிமையுள்ள யோக லிங்கம் (சிவ சிவ)

வானமு தளித்திடும் இலிங்கம் - நம்மை
வாழ வைக்கும் ராமலிங்கம்
தேனமுதத் தமிழ் மாலை - யான
தேவாரஞ் சூடிய லிங்கம்

அகப்புறத் தத்துவ லிங்கம் - ஓம்
ஆகாச மாகிய லிங்கம்
இகபர சுகந்தரும் லிங்கம் - காசி
இலகும் விசுவநாத லிங்கம்

வான்வடி வாகிய லிங்கம் - சுடர்
மதிவிழி யாகிய லிங்கம்
ஊன்வளர் உயிர்க்குயிராகி - எங்கள்
உள்ளத்தில் நடமிடும் இலிங்கம்

அகத்தியர் வணங்கிய லிங்கம் - யாரும்
அடிமுடி காணுத லிங்கம்
குகப்பொரு ளாகிய லிங்கம் - மகா
குண்டலி குலவிய லிங்கம்

பாபத்தைப் போக்கிடும் இலிங்கம் - மலைப்
பாம்பணி மேவிய லிங்கம்
ஆபத்தை விலக்கிடும் லிங்கம் - ஓம்
ஆத்ம சுகமளிக்கும் லிங்கம்

தீபத்தின் சுடரினைப் போலே - எங்கள்
சித்தத்திலே பொலியும் லிங்கம்
சாபத்தை நீக்கிடும் லிங்கம் - பர
சாந்தத்தை யளித்திடும் லிங்கம்

அச்சத்தைப் போக்கிடும் லிங்கம் - சீ
வாலயத் துள்வளர் லிங்கம்
இச்சையை இயற்றிடும் லிங்கம் - பே
ரின்பமே யாகிய லிங்கம்

கைவந்த கனியென நிலவும் - ஞானக்
கண்ணுக்குக் கண்ணுன லிங்கம்
சைவத்தின் ஜீவய லிங்கம் - என்றும்
ஜபந்தரு மங்கள லிங்கம்

ஜய ஜய சிவ சிவ லிங்கம் - ஓம்
சாந்தலிங்கம் சோமலிங்கம்
ஜய ஜய சங்கர லிங்கம் - ஓம்
சாம்ப சதாசிவ லிங்கம் !

முருகன் திருநாள் - கந்தசிருட்டி :

கந்தன் திருநாளில் மாபெருங் கூட்டம். புதுக் கோயில் மண்டபத்தில் நடந்தது. இசைக் கருவிகள் பல இணைந்தன. நான் ''முருகன் பெருமை'' என்பதுபற்றிக் கந்த புராணப் பாடல்களுடன் திருப்புகழையும் இணைத்துக் கதை செய்தேன். இடையே தொல்காப்பியம், திருக்குறள் ஆகிய பழம்பெரு நூல்களில் உள்ள களவு, கற்பியல்களையும் தமிழர் பண்பாட்டையும்

நாகரிகத்தையும் விளக்கினேன். முடிவில் எல்லா மக்களும் சேர்ந்து பாட ஒரு பாட்டு எழுந்தது. சில வரிகள் இங்கே தருவோம்.

அப்பா பன்னிருகையா
அழகான முருகையா
அன்பர்க்கருள் மெய்யனே - முருகா
ஒப்புயர்வில்லாத ஓங்காரப் பொருளினை

ஓதும் சிவகுருவே - முருகா
ஓங்கும் கனல் உருவே!

பண்டார் தமிழ்மணக்கும் பன்னிரு கைவேலா
பக்தர்க் கனுகூலனே - முருகா
தொண்டர் துயர்தீர்க்கும் தோன்றாத் துணைநீயே
சுப்ரம்மணிய சிவமே

தாயினும் தயவுள்ள சக்திக் குமரனே
தஞ்சம்புகுந்து நின்றோம் - முருகா
நோய்நொடி யில்லாது நூறாண்டு வாழச்செய்
நூதன மேதினியில்.

நல்ல வுடலுடனே - நல்ல மனமுடனே
நல்ல செயலுடனே - முருகா
நல்ல சமயோக நாட்டத்துடன் இங்கே
எல்லாரும் வாழச் செய்வாய்

சீரும் சிறப்பும் கல்வி - செல்வத் தொழிலும் ஓங்கத்
தேசத்தைக் காத்திடுவாய் - முருகா
போரும் புயலுமின்றிப் போட்டி பொறாமையின்றிப்
புதுவாழ்வு நல்கிடுவாய்

வித்தகப் புலமையும் - விஞ்ஞானத் திறமையும்
வேதாகம வாழ்க்கையும் - முருகா
சக்தியும் சமயோக சித்தியும் ஈந்தருள்
சரணம் சிவமுருகா!

அங்கே முருகன் ஃசூலுக்களின் கடவுள் சைவத்திற்குப் புறம்பானது - இலிங்கம் நடராசர் இரண்டே வணங்கத் தகும் என்ற தீவிரச்சைவர் கூட்டம் உண்டு. நான் ஃசூலுக்களிடையே சூலந்தாங்கிய சிவபிரானே உங்கள் கடவுள். சிவனுக்கு எட்டுருக்கள் – ஐம்பூதம், மதி, இரவி, ஆன்மா - இரவியை வணங்கும் சூலுக்களும் ஃசூலமேந்திய சிவனடியார்களே என்று விளக்கம் செய்து வைத்தேன். முருகன் வேறில்லை சிவன்

வேறில்லை. சிவன் நெற்றிக் கனலே முருகன். ஆறு பட்டையான அந்தக் கனலே முருகன் ஆனது.

அருவமும் உருவும்ஆகி அனாதியாய்ப் பலவாய் ஒன்றாய்ப்
பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனி யாகக்
கருணைகூர் முகங்கள் ஆறும், கரங்கள் பன்னிரண்டும் கொண்டு
ஒருதிரு முருகன் வந்தாங்கு உதித்தனன் உலகம் உய்ய.

என்ற பாட்டை விளக்கிச் சிவனும் முருகனும் கணபதியும் ஒரே உண்மையின் பன்மை விளக்கமே என்று உறுத்தினேன்.

முடியாப்பிறவிக் கடலிற்புகார்; முழுதும் கெடுக்கும்
மிடியாற் படியில் விதனப்படார்; வெற்றிவேற் பெருமான்
அடியார்க்கு நல்ல பெருமான்; அவுணர்குலம் அடங்கப்
பொடியாக்கிய பெருமான் திருநாமம் புகல்பவரே.

என்ற கந்தரலங்காரத்தை விளக்கி ஒரு நாமாவளி முழங்கச் செய்து முடித்தேன்.

சிவமுருகா ஓம் - சிவமுருகா ஓம்
சிவமுருகா - ஜய - சிவமுருகா !!

இனி நாட்டில் உள்ள பல சங்கங்களுக்குச் சென்று அருட் பணி நாட்டுவோம்—ஓம்.

நாம் அஞ்சுமாறே

வாளுலாம் எரியும் அஞ்சேன்
வரைபுரண் டிடினும் அஞ்சேன்
தோளுலா நீற்றன் ஏற்றன்
சொற்பதம் கடந்த அப்பன்
தாளதா மரைகள் ஏத்தித்
தடமலர் புனைந்து நையும்,
ஆளலா தவரைக் கண்டால்
அம்ம நாம் அஞ்சு மாறே.

—மாணிக்கவாசகர்

பழந்தமிழரின் சம உடைமை நெறி

[தாயம்மாள் அறவாணன், எம். ஏ.

துணைப் பேராசிரியர் பச்சையப்பன் மகளிர் கல்லூரி, சென்னை-32.]

தனிமனிதனிடம் செல்வம் குவியாமல் தடுத்து, தனிமனிதனிடம் செல்வம் குவிந்திருந்தால் பறித்து, எல்லாரிடமும் பகிர்ந்து பங்கிட்டு அளிப்பதை வற்புறுத்துகிறது பொதுவுடைமை நெறி. அறவழியிலோ, மறவழியிலோ, புறவழியிலோ, மரபு வழியிலோ செல்வத்தையும் செல்வாக்கையும் ஒரு சிலர் குவித்து வைத்து உரிமை கொண்டாடுவது தனியுடைமை நெறி. பலரை வாழ வைக்கச் சிலரிடம் சேர்ந்திருக்கும் செல்வத்தைச் சட்டத்தின் மூலமோ வன்முறையின் மூலமோ பறிமுதல் செய்யச் சொல்கிறது பொதுவுடைமைப் பாதை. இதனுல் சிலர் வாட, பலர் வாழ நேருகிறது. செல்வத்தைத் தன் தேவைக்கு மிஞ்சி வைத்திருக்கும் தனியுடைமை வாதிகள் — சிலர் வாழ, பலர் வாட நேருகிறது. இரு பக்கமும் இருக்கின்ற வாட்டத்தைத் தவிர்த்து வாழ்வைக் கொடுக்கும் கொள்கை ஒன்று உண்டு. செல்வம் குவித்திருக்கும் செல்வர்கள் தாங்களே மனமுவந்து இல்லாதார்க்கு வழங்கி விடும் தருமகர்த்தா முறை புதுமையானது. ஆனுல், பொதுமையானது. குருதிப் புரட்சி எதுவும் விளைக்காமல் கொள்கைப் புரட்சி வழி, பொதுவுடைமை, தனியுடைமைகளை நடைமுறையாக்கும் கொள்கை இது. இதைத் தான் அண்ணல் காந்தி தம் எழுத்துக்களிலும் பேச்சுக்களிலும் வற்புறுத்தினுர். செல்வத்தை ஓரிடத்தில் குவிக்காமல், குவியாமல், பரவலாக்கும் இம் முறையும் ஒருவகைப் பொதுவுடைமை நெறியே. இத் தகு பொதுவுடைமை சங்க காலத்தில் இருந்தமையைச் சுருக்கமாக இக் கட்டுரை விளக்கும்.

சங்க காலத்தில் அனைத்துச் சொத்துகட்கும் அதிகாரியாக இருந்தவன் அரசனே. மக்கள் அனைவரும் தம் வருவாயின் ஆறில் ஒரு கூற்றைத் திறையாக வேந்தனுக்கு வழங்கினர். உறுபொருள், உல்குபொருள், ஒன்னுர்த்தெறு பொருளும், வேந்தனிடம் குவிய அவனே பெருஞ் செல்வனுக விளங்கினுன். இவ்வாறு 'அக்கால அரசியல்' நடை முறையில், இயற்கையாக ஏற்பட்டிருந்த செல்வக் குவியலைத் தடுக்கவும், அச் செல்வத்தைப் பிறருக்குக் கொடுக்கவும் ஒரு நடைமுறை மேலோங்கி இருந்தது. அது தான் கொடை முறையாகும். 'செல்வத்துப் பயனே ஈதல்' என்றும் 'ஈதல் இசைபட வாழ்தல் உயிர்க்கு ஊதியம்' என்றும் ஊருணியாகவும், பயன்மரமாகவும், பழமரமாகவும், வாழ்தல் தான் வாழ்க்கை என்றும் நம்பிக்கை ஊடா

டிக் கிடந்தது. அரசர்கள், பெரும்பாலோர் கொடுத்துச் சிறந் திருந்தனர். கொடுப்பதாலேயே கொடை வள்ளல்கள் என்ற சிறப்புப் பெயரும் எய்தி இருந்தார்கள்.

'எத்துணையாயினும் ஈதல் நன்று' —புறம் - 141.

வறுமை போக்கப் பொருள் கொடுக்கும் மன்னனின் பெருமை காட்டுகின்றது இப்பாட்டு.

'உன்னி வருநர் உலைவு நனிதீர
தள்ளாது ஈயும் தகைசால் வண்மை' —புறம் - 158.
'ஈயேன் என்றல் அதனினும் இழிந்தன்று' —புறம் - 204.

என்றுவரும் புறப்பாடல் வரிகள் தடையின்றிக் கொடை வழங்கும் வேந்தனின் மாட்சிமையைக் காட்டுகின்றன.

பொருள் குறைந்தோர், பொருளின்றி நொந்தோர், நொந்து வந்தோர் இவர்கள் இருந்தாலும் இவர்களுக்கு, வரையாது வழங்கும், மனம் தளராது கொடுக்கும் வள்ளல்கள் இருந்தார்கள். அவ் வள்ளல்களே போற்றப்பட்டார்கள். அவ் வள்ளல்களே மதிக்கப்பட்டார்கள் என்பதை,

'புரவலர் இரவலர்க்கு இல்லையும் அல்லர்'

என்ற புறப்பாட்டு எடுத்துக் காட்டுகிறது.

புற வாழ்க்கையில் தனி மனிதனுக்கும் வேந்தனுக்கும், புகழை ஈட்டித் தந்தது —இரண்டு தான். ஒன்று மறம்; போர்க் களத்தில் நிகழுவது. மற்றொன்று அறம்; வாழ்வுக்களத்தில் நிகழுவது. இவ்வறமே உயிர், உயர்வு என்று நம்பும் உளப் போக்கைப் பண்டைய இலக்கியங்கள் தெளிவாகக் காட்டு கின்றன.

பழம் புலவர்களின் புகழ்ப்பாடல்களைப் பெரும்பாலும் பெற்றவர்கள் மறவாழ்க்கையாலோ, அல்லது அறவாழ்க்கை யாலோ தான் பெற்றார்கள். புலவர்கள் தங்களுக்குக் கொடுக்கா விட்டாலும் பிறருக்குக் கொடுக்கும் குணமில்லாதாரைத் தூற்றி னார்கள். இளவெளிமானைப் பற்றிய (புறம் - 162) பாட்டு இதனை வற்புறுத்துகின்றது. இவர்களன்றிப் பயன் எதிர் பார்க்கும் கொடுப்போரைப் பழித்தார்கள். பயன் எதிர்பாராது கொடுப்போரையே வாழ்த்தினார்கள். அவ்வாறு கொடுப்போரை

'கருவிவானம் போல வரையாது
சுரக்கும் வள்ளியோர்' —புறம் - 204.

என மாரிக்கு நிகராகப் புகழ்ந்தார்கள். பயன் எதிர்பார்த்துக் கொடுப்போரிடமிருந்து, எதிர்பாராது கொடுப்போரைத் தனித் துப் பிரித்து, சிறப்பித்துப் பாடினார்கள்.

"இம்மைச் செய்தது மறுமைக்கு ஆம் எனும்
அறவிலை வாணிகன் ஆயலன்"

என்று வரும் புறப்பாட்டு வரியும்,

'மறுமை நோக்கின்றோ அன்றே' —புறம் - 141

என்று வரும் வரியும் இதனை வற்புறுத்தும். இவை யெல்லாம் அக்கால வேந்தர்க்கும் மாந்தர்க்கும் இடையேஇருந்த கொடை முறையைச் செல்வக் குவிப்பின் தடைமுறையை, பகுத்துண்ணும் முறையை, பகிர்ந்தளிக்கும் முறையைத் 'தருமகர்த்தா' முறையை எடுத்துக் காட்டுகின்றன.

ஆற்றுப்படை இலக்கியங்கள் பாட்டுடைத் தலைவனாகிய மன்னனின் சாதிபேதமற்ற விருந்தோம்பும் முறையையும் கொடுத்தோம்பும் முறையையும் காட்டுகின்றன ஈதன்றி ஆற்றுப் படை இலக்கியங்களிலுள்ள தனிச்சிறப்பு, குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் நில மாந்தரின் விருந்தோம்பு முறையை எடுத்துக் காட்டுவதுதான். தம் ஊர் வழியே செல்லும் பாணர், பாடினியர்களுக்கு மனம் உவந்து தம் வீட்டு உணவு வகை களைக் கொடுத்து வருவதும் அக் காலத்திலிருந்தே ஒருபங்கீட்டு முறையை—எடுத்துக் காட்டுகிறது. யார் சிரித்தால் என்ன? யார் அழுதால் என்ன? நாம் நலமாயிருந்தால் போதும் என்ற தன்னல வேட்கையை உடைத்தெறிந்து எல்லாரும் நலமாய் இருக்க வேண்டும் என்ற 'யாவரும் கேளிர்' எனும் கொள்கை இருந்ததும் இன்பத்தையும் துன்பத்தையும் பகிர்ந்ததும் பொது வுடைமைச் சாயல் உடையனவே.

பேரளவு தருவது ஈகையாகவும், பயன் எதிர்பாராது தருவது ஒப்புரவாகவும், ஓரளவு வழங்குவது விருந்தோம்ப லாகவும் பழந்தமிழர் வாழ்வில் ஒன்றிப்போய் விட்டன. கொடுப் பதே குணம் எனுங்கொள்கை ஊறிப்போய் அது சமுதாய அறமாக, தவிர்க்க முடியாத அறமாக, ஒரு மரபாகவே உரு வாக்கப்பட்டது. அதனால்தான் பின் தோன்றிய நீதி இலக் கியங்கள் ஈகையை மிகுந்த வேகத்தோடு வற்புறுத்தின. 'தரும கர்த்தா முறை' என்ற கொள்கை தனிவடிவம் பெருவிட்டாலும் அதற்குரிய அனைத்துக் கூறுகளும் அக் காலத்தே இடம் பெற்று விட்டன. கொடுக்க வேண்டும் என வேந்தரும் மாந்தரும் நினைப்பதும் கொடுத்தோரை முழுமனத்தோடு பாராட்ட வேண்டும் எனப் பாவலன் கருதியதும், கொடா தோரைப் பாராட்டாமல் வெறுத்ததும் பொருள் ஒரு பக்கமாகக் குவியாமல், அற முறையில் தவிர்த்ததே யாகும்.

குடல் நோய்கள்

[டாக்டர் முருகவேள் பாலசுந்தரம், இலங்கை]

பெருங்குடல் (Colon)

சிறுகுடலிலிருந்து வரும் கழிவுப் பொருள்கள் இரு குடல்களுக்கு மிடையிலுள்ள கபாடம் வழியாய்ப் பெருங்குடலை அடைகின்றன. பெருங்குடலும் சிறு குடலைப் போலவே மூன்று பாகங்களை யுடையதாயிருக்கிறது.

அவை :—

ஒன்று ஏறுகுடல், (ஆரோகணம்); இரண்டு குறுக்குக்குடல் (அனுப்பிரஸ்தம்); மூன்று 'இறங்குகுடல்' (அவரோகணம்). இப்பகுதியில் ''பிருகாந்திரம்'' மலப்பை அஃதாவது குதம், மலவாய் (அபானம்) என்பன அடங்கும். பெருங்குடல் விரிந்து சுருங்குவதால் கழிவுப்பொருள்கள் குதத்துட் சென்று தங்கிப் பின் குதவழியாய் மலவாயிலை (அபானவாயிலை) அடைந்து மலமாகவே வெளியே கழிகிறது.

வயிற்றிலுண்டாகும் நோய்கள் (108) நூற்றெட்டு; அவற்றுள் வாத மிகுதியாலுண்டாகும் நோய்கள் (56) ஐம்பத்தாறு; இவற்றுள் முதன்மையான நோய்கள், மலக்கட்டு (மலபந்தம்), மல வரட்சி, மூலவாயு, குடகரி, குடல்வாதம், குடற்பிதுக்கம் (அண்டவாயு), குடலிறக்கம் அஃதாவது (Herneya). சேணியா, கெற்பவாயு, சுரோணித வாயு, மேகநோய் முதலியனவும் அடங்கும்.

மருத்துவ முறை :

''வருத்த முறைப்பாடு மந்தத்தால் வாயுவாகும்'' என்பதனாலும், 'மலமது சிக்கி நின்றால் வாதமே யதிகமாகும்' என்ற முறைப்படியும் வாதக்குற்றம் மிகுந்து உண்டாகும் எவ்வித நோயானாலும் மலத்தைச் சுத்தி செய்வதால் சமநிலையடைவது வழக்கமேயாகும். ஆதலால் மலக்கட்டு நீக்கப்பட, பேதி அவசியமாகிறது. 2. மலவரட்சி. இதற்கு அறுவடைச் சூரணம், சூரத்தாவரைக் கஷாயம் போன்ற மலமிளக்கிப் பேதியாக்கும் மருந்துகளைக் கொடுப்பது நன்மைபயக்கும்.

3. மூலவாயுவுக்கு, மூலவாயுப்பொடி, வேற்கொம்புச் சூரணம், மிளகு சூரணம், பஞ்சதீபாக்கினிச் சூரணம், அட்ட சூரணம் போல்வன.

4. குடகிரி — உண்டாவதற்குரிய காரணங்கள் — உடல் வரட்சி, அதிக சூடுள்ள உணவுகளை உட்கொள்ளல், பரம்பரை

யான மூலச்சூடு, நித்திரைக் குறைவு, பசி இருத்தல், ஆகாத உணவுகளை உட்கொள்ளல் முதலிய காரணங்களால் இந்நோய் ஏற்படுகிறது.

இதன் பழைய தோற்றம் :

இந் நோய் தோன்றுவதற்குச் சில காலங்களுக்கு முன்னதாகவே வயிற்றின் கீழ்ப் பகுதியில் இன்னதென்று சொல்ல முடியாத ஒரு விதமான வலி காணப்படும். பின் மலவாயின் மேல் இடப்புறமாக உள்ள மலப்பையை அடுத்து விறுக்-விறுக் கென்ற குத்துவலி சுருக்-சுருக் கென்று வலித்துக் குறட்டும். இவற்றோடு மலக்கட்டும் உணவில் வெறுப்பேற்படக் கூடிய போதியவளவு பசியில்லாதிருத்தலும் காணப்படும். பின்பு உடலில் வெளுப்பு உண்டாகும்.

குடகிரியின் குணம் :

"கடைக்குடல் முள்ளந்தண்டில் கலந்துகை யடியிற்குத்தி
இடைப்பட வலித்துப்பின்னும் மிகஅடி வயிற்றில்நின்றே
புகைத்துற எரிந்தழன்று புரண்டிடும் மறுகிநோகும்
இடைப்புறந் தன்னில்நிற்கும் இதுகுட கிரிஎன்றோதே"

கடைக்குடல் முள்ளந்தண்டில் வலி, குத்து, உளைவு, சுழற்சி, புரட்சி, நோவு வீக்கம் முதலிய குணங்கள் உண்டாகும். பின் இது மேல்நோக்கிப் பரந்து சென்று இடப்புறத் தோள்பூட்டில் உளைவு முதலிய வேதனைகளைச் செய்யும். சில வேளை இப்படியாகத் துன்பம் செய்து பின்னர்க் கீழிறங்கி முள்ளந்தண்டிலும், அடிவயிற்றில் இடப்புறத்திலும் நிற்கும். உணவுகளை உண்டவுடன் சிலருக்கு வேதனை மிகுதியாகும். மலம் இறுகிக் கட்டியாகிக் கொள்ளும். மலத்தை வெளிப்படுத்தினால் இவ் வேதனையால் ஏற்படும் துன்பம் ஓரளவுக்குச் சிறிது குணமாகும். மூலவாயு என்னும் அபான வாயு வெளிப்பட்டாலும் நிலையில் சிறிதளவு மாற்றமேற்பட்டுக் குணமுண்டாகும். நாளடைவில் நோயாளி இளைத்துப் போவான். இவ்வரிய நோய்க் காலத்தைத் திட்டமாக வகுத்து இந்நோய் என்று சொல்ல முடியாது. சிலருக்குத் தகுந்த மருத்துவம் செய்யாமையினால் இரண்டு, மூன்று ஆண்டுக் காலம் இந் நோய் தொடர்ந்து நின்று பல தொல்லைகளை யுண்டுபண்ணி வருத்துவதும் உண்டு. இக் குடகிரிவாயுவைச் சிலர் குன்மநோயின் பாற்படுத்திக் கூறுவதுமுண்டு. ஆனால் குன்மத்துக்கு வீக்கம் உண்டு. கட்டி அல்லது கட்டுண்டாகிப் புண் உண்டாகும். வாந்தியேற்பட்டுச் செரியின்மை யுண்டாகும். குடகிரியில் இவை உண்டாகா, என்பது ஆய்ந்த அறிஞர்கள் கருத்தாகும். குன்மநோய் இரைப்பையில்

ஏற்படுவது. குடகிரிநோய் கடைக்குடலில் உண்டாவது. குன்ம நோய் இரைப்பை, ஈரல் சிறுகுடல் இவற்றிலும் வருத்தஞ் செய்யும். ஆனல், குடகிரியில் அடிவயிற்றில் இடப்புறத்திலும் நோய், வலி வேதனை இருக்கும். இவை காரணமாகவே குடகிரி வேறு; குன்மம் வேறு என்று மிகவும் எளிதாக அறிந்து கொள்ளலாம். குடகிரியில் இந் நோயின் குணம் குறிகள்:

இந் நோயினல் எரிவு, வலிப்பு, வயிறு கல்லுப்போன்று இருத்தல், நாளடைவில் நாபியைச்சுற்றி வலிப்புடன் கூடிய வாயு உண்டாகும் இந் நோய் அதிகரித்தால் கொடிகளற்சிச் சூரணம், களற்சி மாத்திரை களற்சிக் குழம்பு, இஞ்சிக்குளிகை, அகத்தியர் குழம்பு, வாதசஞ்சீவி இவற்றில் ஒன்றைத் தேக நிலை, நோயின் தன்மை கண்டு பேதியாகக் கொடுக்க வேண்டும். இம் மருந்துகளால் பெரும்பாலும் நோய் குண மடையு மென்பர் நம்மறிவர்களாகிய சித்தர்கள்.

குடல்வாதம் :

''உடலிடை யோடிமீண்டே உழைந்துசால் சந்துகைகள்
குடலிடை கூப்பிட்டோடிக் குமுறிடுங் குடலிற்றங்கும்
கடலிடைத் திரையேபோலக் கலக்கிடுங் கலங்கிசிற்கும்
நடமிடு குடல்வாதத்தின் குண மென நவில்வதாமே''

இந் நோயும் குடகிரி நோய்க்கு அடுத்த படியாக அதிலும் கூடிய குணங்குறிகளையுடையது. இது கடைக் குடலிலும் கொப்பூழ், கொப்பூழுக்குக் கீழ் நடுப்பெறவும் சில வேளைகளில் வயிறு முழுவதுமே குத்து, உளைவு, எரிவு, சுழற்சி, புரட்சி, நோய், வயிறூதல், வயிறுமேல் நோக்கிப் பரந்து இடப்புறப் பக்கத்துத் தோள் பட்டையில் உளையும், பேச முடியாது இளைக்கும். காதடியில் நோவும், கைச்சீப்பில் உளைவு முதலிய வேதனைகளைச் செய்யும். சில வேளைகளில் கீழ் இறங்கி இட முழங்காலிலும் முள்ளந்தண்டு எலும்பைப் பற்றி, முதுகிலும் அடிவயிற்றின் இடப் புறத்திலும் இருந்து வருத்தம் செய்யும். பெருந் துன்பத்தையே விளைவிக்கும். பசி இராது. மலங் கட்டும், சில வேளைகளில் உடம்புக்கே உலைவைத்து விடும் என்று சொல்லத்தக்கதாக இருக்கும். நாளடைவில் நோயாளி நலிவடைந்து இளைத்து விடுவான். சிகிச்சைக் குறைவால் சிலருக்கு இந் நோய் ஆண்டுக் கணக்கில் தொடர்ந்து நின்று துன்பம் செய்யும். இந் நோயைத் தீர்க்கப் பல வழிகள் உண்டு என்பதை நம்மறிவர்கள் ஆகிய சித்தர்கள் நமக்குக் கூறிப் போந்தவற்றில் ஒரு சில இங்கே காணலாம்.

1. (ஒன்று) கொடிக்களற்சி மரத்தின் அஃதாவது மூலி கையின் வடக்குப் பக்கமாகச் செல்லும் வடக்கு வேரைப் பிடுங்கி,

ஓர் எலுமிச்சம் பழபளவு வரத்தக்கதான உருண்டையை அரைத்து எடுத்துப் பசுப்பாலில் (சுடு பாலில்) அல்லது (பச்சைப் பாலில்) அரைத்ததைக் கலக்கி—குடிக்கவும். குடிக்கக் குடல் வாதந் தீரும். காலே வெறு வயிற்றில் பச்சைப்பாலில் பருகவும். மாலேயில் சுடுபாலில் பருக நன்மை தரும். உவட்டல், (குமட்டல்) செய்தால் காலே மாலே சுடுபால் நன்மை தரும். இருவேளேயும் (பச்சைப்பால்) கறந்த கன்னலோடு கூடிய பால் பொருந்திக் கொண்டால் மிக்க பலன் தரும் என்ப.

கொடிக்களற்சிப் பாணியினலும் குடல்வலிமைக் குறைவு குணமடையும். குடல்வாதம், குடலெரிவு, அண்டவாயு, கழலேறுவாயு இவையனைத்துந் தீருவதற்குக் களற்சி மாத்திரையை உரைத்துக் குடிக்கவும், எல்லா நோய்களும் குணமாகும்.

(அண்டவாயு) குடற்பிதுக்கம் (Herneya)

இந் நோயைக் குடற்பிதுக்கம் எனவும் அண்டவாயு எனவும் அழைக்கின்றோம். இது குடகிரி குடல்வாதம் காரணமாகக் குடலீலொரு பகுதியில் இசிவுண்டாகி, அது காரணமாகக் குடலிலொரு பகுதியில் பிதுக்கமேற்பட்டுக் கொப்பூழுக்கு (தொப்பூழ்க்கு)க்கீழ் நடுப்பெறவோ ஒரு பக்கமாகவோ சில வேளேகளில் இருபக்கமுங்கூடவோ நின்று துன்பம் செய்யும்; அஃதாவது வேதிக்கும். சில வேளேகளில் இது கழலேறு வாயுவாகக் குடற்பிதுக்கத்தையும் இறங்குவாயுவாக விதைகளிலுமிறங்கிக் குடலிறக்கமு மேற்படுகிறது. இது மலசலக்குடல்களே அழுத்தி மலத்தையும் போகாது சலத்தையும் போகாது தடை செய்து குத்துளேவு, எரிவு, சுழற்சி, புரட்சி, நோய், வயிறூதல் முதலிய குணங்களே உண்டு பண்ணி மனிதர்களே வதை செய்யும் ஒரு கொடிய அரக்கன் என்னும் நோயாகிறது. இது மரணவேதனையைத் தருவது மல்லாமல் சடுதியாக மரணமடையவும் செய்து விடுகிறது. ஆகையால் இதில் அதிக ஊக்கமாகவும் உடனுக்குடனுகவும் சிகிச்சை அளிக்க முடியாதோர் நோயாளிகளே முற்கூட்டியே நேர காலத்தோடு அறுவைச் சிகிச்சை வல்லுநர்களிடம் காட்டிச் சிகிச்சை பெறுவது சாலச்சிறந்த முறையாகும். கொடு நோய்களேத் தொடக்கத்திலேயே ஆராய்ந்து அறிந்து கண்டு குணப்படுத்தினர்கள் நம்மறிவர்கள். நாமும் இவ் வழிவகையினை நன்கு கற்றுணர்ந்து கொண்டால் தொடக்கத்திலேயே இக் கொடு நோய்களே ஆராய்ந்து அறிந்து கண்டு குணப்படுத்த முடியுமென்பது நம் சித்தர்களின் முடிவுமாகும். ஆகையால் நாம் நம் சித்தர்கள் வழி நின்று நம்மனைவரையும் நலம் பெறக் காப்போமாக.

உயிர்மெய்ம் முதல் வேர்ச்சொற்கள்

[ஞா. தேவநேயன்]

(முன்பரல் கசுOஆம் பக்கத் தொடர்ச்சி)

நுல்[5] - நீட்சிக் கருத்துவேர் (தொடர்ச்சி)

2. நிற்றல் (தொடர்ச்சி)

நில்—நிலம்=1. நீர்போல் நீண்டோடாது ஒரேயிடத்தில் நிற்கும் பூதவகை. ''நிலந்தீ நீர்வளி விசும்போ டைந்தும்'' (தொல் மர. 90). 2. நிலத்தின் புறணி. ''நிலந்தினக் கிடந் தன நிதி'' (சீவக. 1471). 3. மண் ''நிலத்தியல்பால் நீர் திரிந் தற்றுகும்'' (குறள். 452). 4. நன்செய் அல்லது புன்செய். ''செல்லான் கிழவ னிருப்பின் நிலம்புலந்து'' (குறள். 1039). 5. மேன்மாடம் அல்லது மேல் தளம். ''பல நிலமாக அகத்தை யெடுக்கும்'' (ஈடு, 4 : 9 : 3). 6. நீரும் நிலமுஞ் சேர்ந்த ஞாலம். ''நிலப்பெயரினு நின்சொற் பெயரால்'' (புறம். 3) 7. நிலத்திலுள்ளார். ''நிலம் வீசும் ....குன்றனைய தோள்'' (சீவக. 287). 8. நிலமகள். 9. நாடு. ''செந்தமிழ் நிலத்து வழக்கொடு சிவணி'' (தொல். எச்ச. 2). 10. நிலத்துண்டு. ''நிலந்தரு திருவிற் பாண்டிய னவையத்து'' (தொல். சிறப்புப் பா.) 11. யாப்பின் நிலைக் களம்.

> ''பாட்டுரை நூலே வாய்மொழி பிசியே
> அங்கதம் முதுசொலோ டவ்வேழ் நிலத்தும்''

(தொல். செய். 78). 12. செய்யுளடி யெழுத்து. ''மெய்வகை யமைந்த பதினேழ் நிலத்தும்'' (தொல். செய் 49). 13. எழுத் தசை சீரென்னும் இசைப்பாட்டிடம். ''நிலங்கலங் கண்ட நிகழக் காட்டும்'' (மணி. 28 : 42). 14. இடம். ''நிலப் பெயர்'' (தொல். பெய. 11). 15. வரிசை. ''கற்றுணர்ந் தோரைத் தலைநிலத்து வைக்கப்படும்'' (நாலடி. 133). 16. புலனம் (விடயம்). ''அவதார ரகசியம் ஒருவர்க்கும் அறிய நிலமல்ல'' (ஈடு, 1 : 3 : 11).

ம. நிலம், க. நெல, தெ. நேல

நில்— நில — நிலவு. நிலவுதல் = 1. நிலைத்திருத்தல். ''யாரு நிலவார் நிலமிசை மேல்'' (நாலடி. 22). 2. தங்குதல். ''இறுதியு மிடையும் .... நிலவுதல்'' (தொல். வேற். மயங். 20). 3. வழங்குதல். ''நிலவு மரபினை யுடையது.'' (W.).

நில்—நிலை=1. நிற்கை. "பணை நிலை முனை இ" (புறம். 23). 2. உறுதி. "நீக்கமு நிலையும்" (திருவாச. 3 : 9). 3. நிலைமை. "நன்னிலைக்கட் டன்னை நிறுப்பானும்" (நாலடி. 248). 4. தன்மை. "திருந்து நிலை யாரத்து" (பெரும்பாண். 46). 5. தங்குமிடம். "நெடுந்தேர் நிலைபுகுக." (பு. வெ. 6 : 2). 6. இடம். "நின்னிலைத் தோன்றும்" (பரிபா. 2 : 27). 7. கதவுநிலை. "ஐயவி யப்பிய நெய்யணி நெடுநிலை" (நெடுநல். 86). 8. மாடியடுக்கு. "எழுநிலை மாடங் கால்சாய்ந்துக்கு" (நறுந். 54.). 9. மரபுவழி யுரிமை. "தன்பாட்டன் நிலையாய் வருகிற காணி" (S. I. I. ii, 310). 10. வில்மறவன் நிற்கும் வகை. (மடக்கு, மண்டலம், முன்வலம், பின்வலம்). 11. ஓராள் நிற்கக் கூடிய நீராழம். "நீர்நிலை காட்டுங் காலத்து" (பெரும்பாண். 273). 12. ஒழுக்க நெறி. "நிலையிற் றிரியா தடங்கியான் றோற்றம்" (குறள். 124). 13. வாழ்க்கை நிலை. "பிரமசரிய முதலிய நிலைகளினின்று" (குறள். பரிமே. உரைப்பா.). 14 குலம். "காணிகைக் கொண்ட மறுநிலை மைந்தனை" (கல்லா. 45. 20). 15. நிலைத்த தொழில். 16. ஒட்டாரம். 17. அமையம். 18. வளர்ச்சிப்படி (Stage).

ம. நில, க. நெலெ, தெ. நெலவு.

நிலை — நிலையம் = 1. தங்குமிடம். 2. உறைவிடம். "நியாயமத் தனைக்குமோர் நிலைய மாயினான்" (கம்பரா. கிளை. 55). 3. கோயில். "நல்லூ ரகத்தே திண்ணிலயங் கொண்டு நின்றான்" (தேவா. 414 : 5). 4. தொடர் வண்டி நிற்குமிடம்.

வடமொழியாளர் திருட்டுத்தனமாகவும் ஏமாற்றுத்தனமாகவும் நிலையம் என்னும் தென்சொல்லை நி+லயம் என்று பகுத்து, ஓரிடத்தொடு ஒன்றிப் போதல் என்று பொருள் கூறி, வடசொல்லாகக் காட்டுவர். அம் முறையையே பின்பற்றிச் சென்னைப் ப. க. க. த. அகரமுதலியும் நிலயம் என்னும் தவற்று வடிவையே மேற்கொண்டுள்ளது.

நிலைதல் = நிற்றல். 'உம்மை நிலையு மிறுதியான" (தொல். உருபியல், 17).

நிலைத்தல்=1. நிற்றல். 2. உறுதிப்படுதல். 3. நீடித்தல். 4. மாறாதிருத்தல். 5. என்று மிருத்தல். 6. நீர்மட்டம் ஆளள விருத்தல். "தண்ணீர் ஆளுக்கு நிலைக்குமா ?" (உ. வ).

நிலைப்பு=1. மாறாதிருக்கை. 2. என்றுமிருக்கை.

நிலைமை=1. படித்திறம். "பண்பு மேம்படு நிலைமை யார்" (பெரியபு. திருநீலநக். 23). 2. இயல்பு. "வலியி னிலைமையான் வல்லுருவம்" (குறள். 273). 3. நிற்குநிலை. 4. உறுதி. "நிலையி னெஞ்சத்தான்" (நாலடி. 87). 5. வாழ்வு நிலை. 6. உடல்நிலை. 7. உளநிலை.

நிலையுதல்=நிலைபெறுகை. "தோற்ற முடையன யாவும் நிலையுத லிலவாந் தன்மை" (குறள். அதி. 34, உரைத் தோற்றுவாய்).

நிலை—நினை. நினைத்தல்=ஒன்றை மனத்தில் நிலைக்கச் செய்தல்.

"பலவுறு நறுஞ்சாந்தம் படுப்பவர்க் கல்லதை
மலையுளே பிறப்பினு மலைக்கவைதா மென்செய்யு
நினையுங்கா லும்மக ளுமக்குமாங் கனையளே"

என்னும் 9ஆம் கலித் தாழிசை யீற்றடி முதற்சீர், "நிலையுங் கால்" என்றும் பாட வேறுபாடு கொண்டிருந்திருக்கலாம்.

நில்—நிற்பு=நிற்றல்.

நிற்பு—நிற்பாட்டு. நிற்பாட்டுதல்=1. நிறுத்திவைத்தல்.

நில்—நிற்றம். ஒ. நோ: வெல்—வெற்றம், கொல்—கொற்றம்.

நிற்றம்=நிலைப்பு. நிற்றம்—நிற்றல்.

நிற்றலும்=நிலையாக, என்றும், எந்நாளும். "குணபத் திரன்றாள் நிற்றலும் வணங்கி" (சூடா. 7: 76).

நிற்றம்—நிச்சம். ஒ. நோ: முறம்—முற்றில்—முச்சில்.

நிச்சம்=என்றும், எப்போதும். "நிச்சமும் பெண்பாற் குரிய வென்ப" (தொல். கள. 8). பிரா. நிச்சம்.

நிற்றல் — நிச்சல் = எப்போதும், எந்நாளும். "நிச்ச லேத்து நெல்வாயி லார்தொழ" (தேவா. 21: 3).

க. நிச்சல், தெ. நிச்சலு.

நிச்சல்—நிச்சலும்=எப்போதும், எந்நாளும். "நிச்சலும் விண்ணப்பஞ் செய்ய" (திவ். திருவாய். 1: 9: 11).

க. நிச்சலும்.

நிச்சம்—நித்தம். ஒ. நோ: நச்சு—நத்து.

நித்தம் =1. என்றும் (கு. வி. எ.). "நித்த மணாளர் நிரம்ப வழகியர்" (திருவாச. 17 : 3). 2. என்று முள்ள நிலை. (பெ.). "நேரினித்தமு மொட்டின ளுகுமே" (மேருமந் 652).

நித்தமணாளர் என்பது குறிப்புப் பெயரெச்சத் தொடருமாம். நித்தம் — நித்த. ஒ. நோ : பித்தம் — பித்த.

நித்த = என்றுமுள்ள.

நித்தம்—வ. நித்ய.

நித்தக்கட்டளை, நித்தக்கத்தரி, நித்தக்கருமம், நித்தக் காய்ச்சல், நித்தப்படிகாரன் என்பன தூய தென்சொற்றொடர் களே.

நிச்சல்—நித்தல் = எப்போதும், எந்நாளும். "நித்தல் பழி தூற்றப்பட்டிருந்து" (இறை. கள. 1 : 14).

நித்தல் விழா = நாள்தொறும் நிகழும் விழா. "நித்தல் விழாவணி நிகழ்வித் தோனே" (சிலப். உரைபெறுகட். 4).

நித்தலழிவு = நாட்படிச் செலவு. (S. I. I. iii, 298).

நிச்சலும்—நித்தலும் = எந்நாளும். "உமை நித்தலுங் கைதொழுவேன்" (தேவா. 825). உம்மை முற்றும்மை.

நித்தம்—நித்தன் = 1. கடவுள். 2. சிவபிரான். (பிங்.). 3. அருகன். (பிங்.).

ஒ. நோ: பித்தம் — பித்தன்.

நிற்றம், நிச்சம், நித்தம் என்னும் மூவடிவுகளுட் கடைப் பட்ட நித்தம் என்னும வடிவினின்று, நித்ய என்னும் வட சொல்லைத் திரித்துக் கொண்டு, அதையே முத்தென் சொல் வடிவிற்கும் மூலமாகக் கூறி ஏமாற்றி வருகின்றனர் வடமொழி யாளர். இதற்கு ஏதுவானது, ஏமாறுந்தன்மை மிக்க தமிழரின் பேதைமையே.

என்று முண்மைக் கருத்தைத் தோற்றுவித்தற்கு நிலைப்புக் கருத்தே பொருத்தமானது. வடமொழியாளர் கீழ், பின், உள் என்று பொருள்படும் 'நி' என்னும் முன்னொட்டை மூலமாகக் கொண்டு, ஒன்றன் உட்பட்டது, ஒன்றொடு தொடர்புள்ளது, தொடர்ந்தது, நீடித்தது, நிலைத்தது என்று கருத்துத் தொகுத்து, நித்ய என்னும் சொற்குப் பொருட்கரணியங் காட்டுவர். இதன் பொருந்தாமையை இனிமேலாயினுங் கண்டு தெளிக.

பிராமணன் நிலத்தேவன், சமற்கிருதம் தேவமொழி என்னும் மூட நம்பிக்கையையே அடியோடு விட்டொழிக.

நில் — நிலு — நிலுவை = 1. தங்குகை. "நோயு நிலுவை கொண்டது" (திருப்பு. 1111). 2. கட்டண எச்சம். (arrears) "ஏது குடி நிலுவை" (பணவிடு. 169). ம. நிலவு, தெ. நிலுவ.

நிலு — நிறு. நிறுத்தல் = 1 நிற்கச் செய்தல். 2. எடை நிற்கச் செய்தல். 3. துலை தூக்கி எடைபார்த்தல். 4. தீர்மானித்தல். "நாள்வரை நிறுத்து" (கலித். 31 : 23). 5. அமைத்தல். "காமர்சாலை தளிநிறுமின்" (சீவக. 306). 6. வைத்தல். "நிறுத்த முறையானே" (நன். 109, மயிலை.).

ம. நிறுக்க. நிறுப்பான் = 1. துலாக்கோல். (பிங்.). 2. துலையோரை. (திவா.).

நிறு—நிறுவை = எடை பார்ப்பு, எடை.

நிறு—நிறை = 1. நிறுக்கை. (பிங்.). 2. எடையளவை. "காவெ னிறையும்" (தொல். தொகை. 27). 3. நூறு பலங் கொண்ட அளவை. (சூடா.). 4. துலாக்கோல். (பிங்.). 5. துலையோரை. (திவா.).

நிறைகோல் = துலாக்கோல்.

நிறு — நிறுத்து. நிறுத்துதல் = 1. நிற்கச் செய்தல். 1. நிமிர்ந்து நிற்கச் செய்தல். "வெயில்வெரி னிறுத்த பயிலிதழ்ப் பசுங்குடை" (அகம். 37). 3. நிலைநாட்டுதல். நீ தான் என் குடும்பத்தை நிறுத்த வேண்டும். (உ. வ.). 4. மனத்தை ஒரு நிலையில் இருத்துதல் 5. மேற் செல்லாதிருக்கச் செய்தல். 6. தள்ளி வைத்தல். 7. வாசிக்கும்போதும் பாடும்போதும் உரிய விடங்களில் நிறுத்தல் செய்தல். 8. விலக்குதல். என் வேலைக்காரனை நிறுத்தி விட்டேன். (உ. வ.). 9 தொழில் அல்லது வினை செய்யா தொழிதல். அவர் வணிகத்தை நிறுத்தி விட்டார், அவன் கட்குடிப்பதை நிறுத்தி விட்டான். (உ. வ.). 10. விளக்கை யவித்தல். 'விளக்க மெய்யிற் காற்றினு னிறுத்தி" (உபதேசகா. சிவத்துரோ. 492).

ம. நிறுத்துக, க. நிரிசு.

நிறுத்து—நிறுத்தம் = 1. நிறுத்துகை. 2. நிறுத்துமிடம்.

நிறுத்தி வைத்தல் = ஒத்தி வைத்தல்.

நிலை நிறுத்தல் = நிலையாக நாட்டல்.

நிறு—நிறுவு, நிறுவுதல் = 1. நிறுத்துதல். மறைமலை யடிகளை நினைவு கூர ஒரு படிமை நிறுவப்பட்டது. (உ. வ.). 2. நாட்டுதல். "தம்புகழ் நிறீஇ" (புறம். 18).

நிறுவு—நிறுவனம் = தொழிற்சாலை, கல்விச்சாலை, ஆராய்ச்சிக்கூடம் முதலியவற்றின் தோற்றுவிப்பு அல்லது அமைப்பு (Establishment).

நிறுவனம்—நிறுவனர் = ஓர் அமைப்பைத் தோற்றுவித்தவர் (Founder).

3. நடத்தல்

நெடு—நெட—நட. நடத்தல் = 1. நிற்கும் இடத்தை விட்டு நீளுதல்போற் காலடி வைத்துச் செல்லுதல். "காளைபின் நாளை நடக்கவும் வல்லையோ" (நாலடி. 398). 2. பரவுதல். "குரையழல் நடப்ப" (பு. வெ 1 : 8). 3. ஒழுகுதல். வேலைக்காரன் வீட்டுத் தலைவனிடம் பணிவாய் நடந்துகொள்ள வேண்டும். (உ. வ.). 4. நிகழ்தல். திருவிழா என்றைக்கு நடக்கும்? (உ. வ.). 5. நிறைவேறுதல். உன் வஞ்சினம் (சபதம்) நடக்கவில்லை (உ. வ.). அது நடக்கிற கருமமா? (உ. வ.). 6. நிகழ்ந்து வருதல். எழுத்தாளர் அதிகாரம் தான் இன்று நடக்கிறது. (உ. வ.). ம. நடக்க, க. நடெ, தெ. நடுச்சு, து. நடப்புனி.

நட—நடக்கை = 1. செல்கை. 2. வழக்கம். "ஞாலத்து வரூஉம் நடக்கையது குறிப்பின்" (தொல். புறத். 36). 3. ஒழுக்கம். நன்னடக்கைத் தகுதித்தாள் வாங்கிக்கொண்டு வா. (உ. வ.). 4. நிகழ்ச்சி. ம. நட.

நட—நடத்தை = 1. ஒழுக்கம். அவன் நடத்தை சரியாயில்லை. (உ. வ.). 2. இயல்பு.

ம. நடத்த, தெ. நடத்த, க. நடத்தெ.

நட—நடப்பு. 1. நடத்தை. 2. கருமம் நிகழ்ந்து வரும் முறை. நடப்பு எப்படி யிருக்கிறது? (உ. வ.). 3. இற்றை நிகழ்ச்சி. நடப்புச் செய்தி என்ன? (உ. வ.). 4. அவ்வப்போது நிகழ்வது. நடப்புக் கணக்கு (Current Account). 5. அடுத்த ஆண்டு. நடப்பிற்குப் பார்த்துக் கொள்ளலாம். (உ. வ.). 6. அடுத்து வரும் சுறவ (தை) மாதம். "நடப்பிற்குக் கலியாணம், கழுத்தே சும்மாயிரு". (உ. வ). 7. காமத் தொடுப்பு 8. இறுதிச் சடங்கிற்கு முந்தின நாள் கல்நடுகை. 9. தாலி வாங்குகை. (யாழ்ப்.). 10. குறிக்கோள். "ஊதியமாகிய நடப்பின் மேலே" (சீவக. 770, உரை). ம., து, நடப்பு

நட—நடவை=1. வழி. கான்யாற்று நடவை. (மலைபடு. 214). 2. கடவைமரம் (Turnstile). (பிங்). 3. வழங்குமிடம். "தலைமை வளர் தமிழ் நடவை யெல்லை." (சேதுபு. திருநாட். 1). 4. திட்டம். "நல்வரங்கொளு நடவையொன் றியம்புவேன்" (சேதுபு. மங்கல. 69).

தெ. நடவ, க. நடவெ. நட—நடம். நடமாடுதல்=1. உலாவுதல். 2. நோய் நீங்கி நடந்து செல்லுதல். 3. அடை பட்டிருநது வெளி வருதல். 4. தீயவர் திரிதல். இங்கு இரவில் திருடர் நடமாடுகின்றனர். (உ. வ.). 5. வழங்குதல். இன்று கள்ளப்பணம் நடமாடுகிறது. (உ. வ.). 6. பரவிவருதல்.

தெ. நடயாடு.

நடமாட்டம்=1. நடந்து செல்கை. அவன் பாயும் படுக்கையுமா யிருக்கிறான். ஒருமாதமாய் நடமாட்டமில்லை. (உ. வ.). 2. வழங்குகை.

தெ. நடையாட்ட.

நட—நடை=1. நடந்து செல்கை. "கோலூன்றிச் சோர்ந்த நடையினராய்" (நாலடி. 13). 2. கோள்களின் செலவு. 3. நடைவேகம். "விடைபொரு நடையினான்" (கம்பரா. எழுச்சி. 10). 4. வழி. (பிங்.) 6. வாசலையடுத்த உட் பக்கம். 7. இடைகழி. "அரக்கர் கிடைகளு நடைகளும்" (இராமநா. சுந். 3). 8. கப்பலேறும் வழி. 9. சாலையோர நடை வழி. 10. அடி. "பகட்டா வீன்ற கொடு நடைக் குழவி" (பெரும்பாண். 243). 11. நடவை. மூன்று நடை தண்ணீர் எடுத்தேன்., மணல் வண்டி எத்தனை நடை வந்தது? (உ. வ.) 12. ஒழுக்கம். 13 ஒழுக்க நூல். "நன்றாக நடை பலவும் நவின்றார் போலும்" (தேவா. 722 : 11); 14. இயல்பு "என்றுங் கங்குலா நடைய தோரிடம்" (சேதுபு. கந்தமா. 69). 15. வழக்கம். 16. தொழில் "மாயோனிகளாய் நடைகற்ற வானோர் பலரும்" (திவ். திருவாய். 1 : 5 : 3). 17. வாழ்க்கை நடப்பு. "நடைப்பரிகாரம்" (சிறுபாண். 104). 18. அன்றாடப்பூசை. "நடையும் விழவொடு நாடொறு மல்குங் கழுமலத்துள்" (தேவா. 152 : 8). 19. சொற்றொடரமைப்பு வகை. "ஒன் றல்லவை பல தமிழ் நடை" (காரிகை. செய். 4. உரை). தூய தமிழ் நடையைப் புதுப்பித்தவர் மறைமலையடிகள். (உ. வ).

ம. நட, தெ. நட, க. நடெ.

நட—நடத்து. நடத்துதல்=1. நடக்கச் செய்தல். 2. நடத்திச் செல்லுதல். 3. நிகழ்த்துதல். 4. மேற்பார்த்தல்.

5. பிறரிடம் ஒழுகுதல். ஆசிரியர் மாணவரை அன்பாய் நடத்து வார். (உ. வ.) 6. கற்பித்தல். ஆசிரியர் இன்று மூன்று பாடம் நடத்தி விட்டார். (உ. வ.) 7. ஆண்டு நடத்துதல். கூட் டத்தை நடத்துகிறவர் யார்? ம. நடத்துக, க. நடசு.

நடத்து—நடாத்து. ஆங்கில அரசர் இரு நூருண்டு இந்தியாவிற் செங்கோல் நடாத்தினர்.

நட—நடவு. நடவுதல்=1. கருமம் நடத்துதல். 2. ஏவு தல், செலுத்துதல். "கணையினை நடவி" (விநாயகபு. 80: 704).

தெ., க. நடுப்பு, து. நடப்பாவுனி.

நடவு—நடாவு. நடாவுதல்=1. நடாத்துதல். "இருளால் வினைகெடச் செங்கோல் நடாவுதிர்" (திவ். இயற். திரு விருத். 33).

நடைபடி=1. நடத்தை. 2. வழக்கம். 3. அறமன்ற நடபடிக்கை.

நடைபடிகள் = செயல்கள்.

நடைபடிகள்—நடபடிகள் = செயல்கள். "அப்போஸ்தலர் நடபடிகள்" (விவிலியம்).

நடபடி—நடபடிக்கை = அறமன்றச் செயல்.

நடபடி=1. நிகழ்ச்சி. 2. வழக்கம். 3. நடபடிக்கை ம. நடபடி.

நடபடி—நடவடி = நடபடிக்கை.

ம. நடவடி, தெ. நடவடி.

நடபடிக்கை—நடவடிக்கை=1. நடத்தை. 2. செயல். 3. அறமன்ற வழக்குத் தீர்ப்புச் செயல்.

க. நடபடிக்கெ, து. நடபாட.

குறிப்பு: முந்தின கட்டுரைத் தொடக்கத்தில், நெகிழ் (நெகிள்)—நீள் என்று குறிக்கப்பட்டுள்ளது.

நெகிள் (நெகிழ்)—நிகள்—நீள்—நிகளம். நிகள்—நிகலம் =நீளம் (உ. வ.) என்று மிருக்கலாம்.

எதுகை முகனை என்பதை எகனைமுகனை யென்பதுபோல, அகலம் நீளம் என்பதை அகலம் நிகளம் என்றும் பொதுமக்கள் வழங்கி யிருக்கலாம்.

———

நோக்கு

[திருக்குறள் பீடம் குருகுலம் அழகரடிகள்]

குறிப்பு :

நோக்கு என்பது நோக்கம்; உள்ளக்குறிப்பு; வருகிறவர்கள் நோக்கம் அறிந்து நடந்தால், வாணிபம் சிறக்கும். நோக்கம் வெளிப்படையாய்த் தெரியாது; குறிப்பால் துணியப்படுவது.

திருக்குறள் சுருங்கக் கூறும் நூல்; இருந்தும், 'குறிப் பறிதல்' என்னும் அதிகாரம் மட்டும் மும்முறை வைக்கப்பட் டிருக்கிறது. வேறு எந்த அதிகாரமும் மும்முறை வந்ததில்லே. 'பொருட்பாலில்' ஒருமுறை 71ஆம் அதிகாரமாகவும், 'இன்பப் பாலில் மற்ருெருமுறை 110ஆம் அதிகாரமாகவும், வந்திருக் கிறது. அல்லாமலும் இன்பப் பாலிலேயே இன்னெரு முறை யும் 'குறிப்பறிவுறுத்தல்' என்னுந் தலைப்பில் 128ஆம் அதிகார மாக வந்திருத்தல் காணலாம். இவையன்றி, 'மன்னரைச் சேர்ந்தொழுகல்' என்னும் அதிகாரத்திலும் 'குறிப்பறிதல்' வருகிறது.

''குறிப்பறிந்து, காலங் கருதி, வெறுப்பில
வேண்டுப, வேட்பச், செயல்''

என்று ஐந்து வகையான பக்குவங்களுடன் அங்கே எடுத்துக் காட்டப்படுகிறது.

தொல்காப்பியத்திலும் 'குறிப்புப் பெயர்' 'குறிப்புவினே' முதலியன எழுத்து, சொல் அதிகாரங்களிலும், 'குறிப்பறிவுறுத் தல்' 'நோக்கு' முதலியன பொருளதிகாரத்திலும் வரும். அகப்பொருள் நுட்பங்கள் வெளிப்படையானவை யல்ல; ஆதலால் அப் பகுதியில் இது, மிகுதியாக வரும். இதனுல், இன்பப் பாலில், இதனே இரண்டு அதிகாரங்களாக எடுத்துக் காட்டுதற்குத் திருவள்ளுவர் உள்ளம் இசைந்தது.

இரு நோக்கு :

முகத்தில் கண்கள் இரண்டுள்ளன; மனக்கண் மறைய இருக்கிறது. அந்த அகக்கண்ணின் குறிப்பு வெளிப்படையாகத் தெரிவதில்லே; புறக்கண்களின்மூலம் குறிப்பாகத் தெரிந்து கொள்ளும்படி உள்நோக்காய் இருக்கிறது. புருவ நடுவில் உள்ளிடங் கொண்டு இது புறம் நோக்கும்; 'நோக்கு' அல்லது

'நோக்கம்' என்று (perception) இது பொதுவில் கூறப்படும்; ஆயினும், இதுவே 'நோக்கு' அன்று;

அருள் நோக்கு :

மனக்கண் நோக்கை அறிந்துகொள்வதே யாவர்க்கும் இயலாது; அதற்கும் மேற்பட்டது 'அருட்கண் நோக்கு,' அதனை ஆயிரத்தில் ஒருவர் அறிவதே அருமை; அதனால்,

> "குறிப்பிற் குறிப்புணர் வாரை உறுப்பினுள்
> யாது கொடுத்தும் கொளல்"

என்றார் திருவள்ளுவர்! என்றவர், குறிப்பிற் குறிப்பு உணர்வார் என்றமையால் நோக்கில் வேறொரு நோக்கு உள்ளதையும் அவர் எடுத்து அறிவுறுத்துகிறார்.

> "இருநோக்கு இவள் உண்கண் உள்ளது"

என்பதில், உண்கண்ணுக்கு வேறாக இரு நோக்குகள் உள்ளன வற்றை மேலுங் கூறுவர்.

நோக்கின் நோக்கு :

'குறிப்பிற் குறிப்பறிதல்' இடத்திற்கேற்றபடி மூன்று வகையில் நிகழக்கூடும்.

1. புறக்கண்களின் குறிப்புக் கொண்டு மனக்கண்ணின் குறிப்பறிதல்;

2. தன் மனக் குறிப்புக் கொண்டு, பிறர் மனக்குறிப்பும் இவ்வாறு இருக்கலாம் என்று அறிதல்.

3. மனக்கண்ணின் குறிப்புக் கொண்டு அருட் கண்ணின் குறிப்பறிதல்;

மூன்று வகையிற் பொருள் கொள்ளுதல், முறையே பொருளும் இன்பமும் அறமும் பற்றியவை. ஒரு நோக்கைக் கொண்டு மற்றொரு நோக்கை அறிவதனால், 'குறிப்பின் குறிப்பறிதல்' என்று இம் மூவகைக் கருத்துக்களுக்கும் சொற் பிரிப்புக் கொள்ளவேண்டும். 'இன்', காரணப் பொருளில் வந்த வேற்றுமை யுருபு.

புறக்கண் பொருள் நோக்கு, வெளிப் பார்வை; ஆதலால், அதை நோக்கு என்று கொள்வது சிறப்பன்று; உள்நிகழும்

இருவகை நோக்குந்தாம் 'நோக்கு' என்பதற்குச் சிறப்புடையன. ஒன்று மனநோக்கு; மற்றென்று அறநோக்கு.

மெய்யுணர்வு நோக்கு :

இதை 'அறநோக்கு' என்றும் சொல்வதுண்டு. 'மெய்யுணர்வு' என்பதைத் தெரிந்துகொள்வதற்கு ஓர் அடையாளம் இருக்கிறது; யாரிடம் மெய்யுணர்வு நிகழ்கிறதோ அவர் எதனையும் திட்டமாய்த் தெரிந்து சொல்வர். ஐயமிருந்தால் அது, மனவுணர்வைச் சேர்ந்ததாய்விடும். தெய்வத் திருவள்ளுவர்,

> "ஐயத்தின் நீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின்
> வானம் நணிய துடைத்து"

என்று 'மெய்யுணர்தல்' அதிகாரத்தில் கூறி, 'ஐயமற்ற உணர்வு மெய்யுணர்வு' எனத் தெளிவாக்குகிறார். அதனால் 'தெய்வத் தகுதி' மேலிட்டு, அதற்குரிய இடமாகிய வீட்டுலகம் அணிமையாகும் எனவும் அதனில் விளக்கினர். அடுத்த குறளில்,

> "ஐயுணர்வு எய்தியக் கண்ணும் பயமின்றே
> மெய்யுணர்வு இல்லா தவர்க்கு"

எனவும் அருளிச் செய்து, 'மனக்கண் நோக்கு' வேறு, 'மெய்யுணர்வு நோக்கு' வேறு என்பதைப் பிரித்துக் காட்டினர். பரிமேலழகர் இதற்குக் கூறும் விளக்கமும் இங்கே நினைக்கத் தக்கது. அது,

> "ஐயுணர்வு — புலன்கள் வேறுபாட்டால் ஐந்தாகிய உணர்வு; (மனம்)
>
> எய்தியக்கண்ணும்—(அப் புலன்களை விட்டுத்) தம் வயத்தாய வழியும்; (மடங்கி ஒருதலைப் பட்டுத் தாரணைக்கண் நிற்றல்)
>
> பயம் இன்று — பலன் இல்லை (வீடு பயவாமையின் 'பயமின்று' என்றார்)
>
> மெய்யுணர்வு இல்லாதவர்க்கு—மெய்யினை உணர்தல் இல்லாதவர்க்கு (மெய்யுணர்வுடையார்க்கே வீடுளது என மெய்யுணர்வின் சிறப்புக் கூறப்பட்டது.)

மனநோக்கு என்னும் நெற்றிக்கண் நோக்கைவிட, 'ஐயமற்ற துணிவைத் தரும் மெய்யுணர்வு என்னும் அறநோக்கே,

'நோக்கு' என்பதற்குச் சிறப்புடையதென்று இதனுல் நுண்ணுணர்ந்துகொள்ளப்படும்.

இந்த அறநோக்குத்தான், தொல்காப்பியச் செய்யுளியலில் வரும் 'நோக்கு' என்பது!

செய்யுளும் நோக்கும் :

அரிய காரியங்களைச் செய்வதற்கு மக்களைத் தகுதிப்படுத்துவது செய்யுள்! அதற்கேற்ற எழுச்சி முயற்சி திறமைகளைச் செய்யுள் செய்யும்; அறநோக்கில்லாதவை செய்யுளாகா; அவற்ருல் வாழ்வுப் பயனில்லை.

ஞானசம்பந்தர், குமரகுருபரர் போன்ருர்க்கு அருள் பதிந்தது; உடனே செய்யுள் வாக்கு எழுந்தது; சங்கச் சான்ருேர், சமய குரவர் வாக்குகள் இத்தகைய அறநோக்குச் செய்யுட்கள்! இதனுல் 'தமிழ்' என்பதை, 'அருள்' அல்லது 'அறம்' என்பர் முன்னேர். அத்தகைய அற வாழ்வுக்கு வகை செய்துதான் திருக்குறள் 'வாழ்க்கை மறை' யாயிற்று.

இவ்வாற்ருல், பொதுநிலையில் அகக்கண் குறிப்பறிந்தாலும், சிறப்பு நிலையில் அதனுள் திகழும் அருட்கண் குறிப்பும் அறிந்து, அதனுல் செய்யுட்கள் நோக்கழகு கொண்டு, அருஞ்செயல் நிகழ்ச்சிகட்கும் வழிவகுத்தன.

பொருளும் இன்பமும் கூறுவது மட்டுமே செய்யுளன்று; அறமும் மிளிர்ந்தால் மட்டுமே அது செய்யுளாகும். வாழ்க்கையிலாளுலும், வாழ்க்கையின் வடிப்பாகிய செய்யுளிலாளுலும் அந்த அறந்தான், 'இனிமை' மிகுப்பது! அந்த நோக்கை அறியாதார், கற்றும் செய்யுளறியாதாரே!

செய்யுளில் மாத்திரை, அசை, சீர், தளை, அடி, என்னும் அளவுகளால் பாவினங்களின் இலக்கணங்களைப் பன்னிப் பன்னிக் கற்றுக் கொள்வதே புலமையாய் விடாது.

செய்யுட்களில் இனிமை ஏறிஞல், அவை 'இலக்கிய' மாகும். அவ்வினிமையே மனங்கொள்ளும் அளவுதான் உணர முடியும்; முற்றும் உணர இயலாது; அதுவரையில், அது, புலமை நோக்கு, அல்லது கற்பார் கண்டு மகிழும் மனக்கண் மகிழ்ச்சியாகும்.

ஆனுல், செய்யுள் நலம் மேன்மேலும் சுரப்புடையதாயிருக்கிறதே! நவில்தோறும் நூல் நயமாயிருக்கிறதே; அதிலும்,

அருள் வாக்குகளாக இருந்துவிட்டால், அச் சுரப்புக்கு ஓர் அளவே இல்லையே; மனக்கண்ணுல் அஃதாவது கல்வி கலைப் புலமையால் மேன்மேலும் எட்ட முடியவில்லையே !

'இலக்கணம்' 'இலக்கியம்' என்னும் இரண்டு பெயர் களிலும், 'இலக்கு' என்னும் சொல் உள்ளது. 'இலக்கு' என்பது குறிக்கோள்; நோக்கம்; உள்ளக் குறிப்பு; குறிக் கோளுடன் வாழும் வாழ்வியல் இலக்கணமாகிய அளவும், இலக்கியமாகிய சுவையும், உடையதாயிருக்கிறது; கற்பது, இங்ஙனம் வாழ்க்கையிற் பழகுவது. சுவை நலம், மேன்மேலும் அருச் சுவையாய்ச் சுரப்பதாயிருந்தால், செய்யுள், அறத்திறம், மிக்கதெனப்படும்; அந்த அறத் திறத்தைத்தான் 'மறைத் திறம்' என்றும் 'மெய்யுணர்வுத் திறம்' என்றும் சொல்வது வழக்கம்.

மன நோக்குக்கும் காரணம், அந்த அற நோக்கு ! மறவா நிலையா அளவிலா மாளா இன்ப மாகடலாய்ச் சுவையூறிக் கொண்டே யிருக்கிறது அப் பேரினிமை ! இத்தகைய அறப் பேரினிமையுடைய செய்யுள், இலக்கணமும் உடையது, இலக் கியமும் உடையது. அவற்ருெடு மறைத்திறமும் உடையது !

மாத்திரை முதலா அடிநிலை காறும் செய்யுளை நோக்கு தற்(குக்) காரணம் ஒன்றே ஒன்றுதான்; அது, வற்ருத செய்யுட் சுவை ! இடையருது சுரந்து கொண்டிருக்கும் அறப் பேரினிமை யாகிய அருட்சுவை நோக்கு ! அருட் புலமையுடையார்க்கு அப் பேரினிமை நோக்கு, தக்க செய்யுட்களிலெல்லாம், முகங் கொண்டு நோக்கிச் சுவை சுரந்து கொண்டிருக்கிறது.

அறத்தின் முதலாய் அமைந்ததருளே

அற்ருக நோக்கி யறத்திற் கருளுடைமை
முற்ற வறிந்தார் முதலறிந்தார்—தெற்ற
முதல்விட் டஃதொழிந்தா ரோம்பா வொழுக்கம்
முயல்விட்டுக் காக்கை தினல்.

—பழமொழி - 370.

இசைத்தட்டில்
முருகப்பெருமான் போற்றி

[இசைமணி சீர்காழி கோவிந்தராசன் பாடியது]



உலகம் உய்ய, குன்றுதோறும் நின்று தன்னருட்செல்வத்தை மக்களுக்கு வாரி வழங்கும் அருட்கடல் முருகவேளினைப் போற்றிப் புகழ்ந்து, கசிந்துருகிப் பாடும்பொழுது அது தெவிட்டாத தெள்ளமுதாகும். புவனத்தில் உயிர்க்குயிராய் நிற்கும் மெய்கண்ட தெய்வமான குமரவேளினை மனமார நினைந்து, நெக்கு நெக்குருகி, வாயாரப் போற்றினால், அத் தமிழ்த் தெய்வம் அடியார்கள் வேண்டிய வரங்கொடுப்பான். அவன் தரும் வளங்களை முத்துக்குமாரசாமி பிள்ளைத் தமிழில் குமரகுருபரர்

''பொழியாத புயல்தங்கு புவனமும்,
திசைமுகப் புத்தேள் பெரும்புவனமும்,
பொன்னுலகும், மண்ணுலகும், எவ்வுலகும்
வேண்டினும், பொருளன்று இவற்கு ; மற்றை
அழியாத வீடும் தரக்கடவன்''

என்று அழகுற எடுத்துரைக்கின்றார்.

அத்தகைய எந்தை குமரவேளின் கருணைக்குப் பாத்திரமானால் நமக்கு

''நீருண்டு பொழிகின்ற காருண்டு விளைகின்ற
நிலனுண்டு பலனுமுண்டு
நிதியுண்டு துதியுண்டு மதியுண்டு கதிகொண்ட
நெறியுண்டு நிலையுமுண்டு
ஊருண்டு பேருண்டு மணியுண்டு பணியுண்டு
உடையுண்டு கொடையுமுண்டு
உண்டுண்டு மகிழவே உணவுண்டு சாந்தமுறும்
உளமுண்டு வளமுமுண்டு

தேருண்டு கரியுண்டு பரியுண்டு மற்றுள்ள
செல்வங்கள் யாவு முண்டு''

என்று 'அருட்பெருஞ்சோதி' வடலூர் வள்ளல் பெருமான் அறிவுறுத்துகின்ருர்.

அருவமும், உருவமும், உருவருவமும் ஆகி, எங்கும் நீக்கமற நிலைத்திருக்கும் தமிழ்த் தெய்வம் முருகனை தீந்தமிழ்ப் பாவால், தேனொத்த இனிய குரலுடன், நாளும் பாடும் பணியே பணியாக உடைய ''இசைக்கடல்'', ''இசைமணி'' திரு. சீர்காழி கோவிந்தராசன் அவர்கள், தமிழ்த் தொண்டே சீரிய தொண்டு என்று தமிழ் அன்னையைப் போற்றி வளர்த்து வரும் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார் வெளியிட்டுள்ள ''முருகப் பெருமான் வழிபாட்டில்'' உள்ள ''நூற்றெட்டுப் போற்றிகளை'' சென்ற 23—11—73 அன்று இசைத்தட்டில் செவிக்கினிய தேனுகப் பாடியுள்ளார். ''அருவாம் உருவாம் முருகா போற்றி'' எனத் தொடங்கி ''என்பால் அருள்புரி என்றும் போற்றியே'' என்று முடிவுறும் நூற்றெட்டுப் போற்றிகளையும், ''பௌளி, பிலஹரி, தன்யாசி, ஆரபி, சண்முகப்பிரியா, ரேவதி, மோகனம், சாமா, கல்யாணி, நாடகுறிஞ்சி, இந்தோளம், மத்தியமாவதி'' ஆகிய பன்னிரு பண்களில் தேன்பாகொப்பத் தம் இனிய குரலால் திரு. சீர்காழி அவர்கள் பாடியுள்ளார்கள்.

நாதத்திற்கே தலைவனை முருகவேளின் பெருமைகளைத் தம் இனிய நாதத்தோடு, இசைய வைக்கும் தம்புரா, வீணை போன்ற தமிழ் நாட்டு இசைக்கருவிகளுடன் நம்மையெல்லாம் இசையவைத்திருக்கிருர் திரு. சீர்காழி அவர்கள். இசைத் தட்டுகள் வெளியிடும் நிறுவனத்தினர், இப் போற்றியைப் பன்னிரு நிமிடத்தில் இசைக்கும்படி ஒரே தட்டில் இருபக்கமாக ஒலிப்பதிவு செய்துள்ளனர்.

தமிழ்த் தொண்டு செய்து வரும் சைவசித்தாந்த நூற் பதிப்புக் கழக ஆட்சியாளர் தாமரைச் செல்வர் திரு. வ. சுப்பையா பிள்ளை அவர்களுக்கும், இசைத்தொண்டு செய்து வரும் ''இசைமணி'' திரு. சீர்காழி கோவிந்தராசன் அவர்களுக்கும் தமிழ் கூறும் நல்லுலகம் என்றென்றும் நன்றிக் கடப்பாடுடைய தாகும்.


வாழ்க தமிழ்!

வளர்க தமிழிசை !!

—சிவ. சண்முகம்.

சோவியத் நாட்டு நேரு விருது

இந்திய உருசிய மக்களின் நல்லுறவை வளர்க்கும் நோக்கத்துடன் 1964ஆம் ஆண்டில் நிறுவப் பெற்ற 'சோவியத் நாட்டின் நேரு நினைவு விருதுக்குழு' சோவியத் நாட்டின் அறிவியல், இலக்கியம், பண்பாடு, கலை இன்னபிற துறைகள் பற்றி நாவலாசிரியர், கவிஞர், இதழ் எழுத்தாளர் ஆகியோர் இந்திய மொழிகளில் எழுதும் சிறந்த புதினங்கள், கவிதைகள் ஆகியவற்றுக்குப் பரிசுகள் வழங்குவதென முடிவு செய்து, 1973ஆம் ஆண்டிற்குரிய பரிசினை வழங்கியுள்ளனர்.



முதல்பரிசாக ரூ. 8000மும் 2 கிழமைக்கால சோவியத் நாட்டுச் சுற்றுபயணச் செலவுடன் 4 பரிசுகளும் இரண்டாம் பரிசாக ரூ. 3000மும் 2 கிழமைக்காலம் சோவியத் நாட்டுச் சுற்றுப்பயணத்துடன் 4 பரிசுகளும் வழங்கப்பட்டன.

இந்த முறையில் வழங்கப் பெற்ற பரிசுகளில் திரு சு. ந. சொக்கலிங்கம் அவர்கள் எழுதிய "சோவியத் நாட்டில் நான் கண்டதும் கேட்டதும்" என்னும் தமிழ் நூலுக்காக 2 ஆம் பரிசு ரூ. 3000 பெற்றுள்ளார். பின்னர் சோவியத் சுற்றுப் பயணம் மேற்கொள்வார்.

பேராசிரியர் திரு. சு. ந. சொக்கலிங்கம் அவர்கள் 4—4—1928இல் செங்கற்பட்டு மாவட்டம் பிள்ளையார் குப்பத்தில் பிறந்தார். சென்னை பச்சையப்பன் கல்லூரியில் படித்துத் தமிழ் ஆனர்ஸ் பட்டம் பெற்றார். அரசினர் கலைக்கல்லூரியில் துணைப் பேராசிரியராகப் பணியாற்றினார். 1957 முதல் 1960வரை மாஸ்கோவில் கலை அமைச்சுத் துறையில் மொழிபெயர்ப்பாளராகப் பணியாற்றினார். 1960 முதல் 1963 வரை தமிழகப் பொதுக் கல்வித்துறையில் பணியாற்றியபின், அயல்நாடுகளில் சுற்றுப்பயணம் செய்தார். இவர் தமிழ், ஆங்கிலம், உருசியம் ஆகிய மொழிகளில் வல்லவர்.

மலையாளத்தில் தாம் எழுதிய முற்போக்குக் கருத்துடைய நூலை எழுதியதற்காகத் திரு. தகழி சிவசங்கரம் பிள்ளை முதல் பரிசாக ரூ. 8000 பெற்றுள்ளார். அவரும் இரு கிழமைகள் சோவியத் நாட்டில் சுற்றுப் பயணம் செய்வார்.

பேராசிரியர் ஆர். சனார்த்தனம் நாயுடு பெரும்பிரிவு

செஞ்சொல் நாவலரும் பெரும் பேராசிரியருமான ஆர். சனார்த்தனம் நாயுடு, பி. ஏ., எல். டி, டி. இ. (ஆக்சன்) டி. எல். எசு. (லண்டன்) அவர்கள் நவம்பம் 27இல் தம் 80ஆவது அகவையில் மறைவுற்றது நூலகத் துறைக்குப் பேரிழப்பாகும். தமிழ்நாட்டில் இன்று மாவட்டந்தோறும் நூலக ஆணைக்குழுவின் வழியாக நூலகப்பணி சிறந்து நடைபெற்று வருவதற்குக் காரணமாயிருந்தவர் திரு நாயுடு அவர்கள். 'சென்னை

நூலகச் சட்டம்' 1948இல் நிறைவேறியபின் 1950இல் அதைச் செம்மை யுறச் செயல்படுத்தியவர் திரு நாயுடு ஆவார்.

திரு. சனார்த்தனம் நாயுடு முதன்முதலில் கன்னிமாரா நூலகத்தின் முதல் இந்திய நூலகராகப் பொறுப்பேற்றார். கால் நூற்றுண்டுக் காலம் அப் பணியிலிருந்து அந் நூலகத்தின் பெருமையை நாட்டுக் குணர்த்தியவர் அவரே. வெள்ளையர் ஆட்சியில் அவர்களே வியக்கும் வண்ணம் சிறந்த முறையில் நூலகப் பணியாற்றி வந்தார். அதிலிருந்து ஒய்வு பெற்றபின்கூட நூலகப்பணி அவரை விடவில்லை. நல்ல நூலகரில்லாது வருந்திக் கொண்டிருந்த சென்னைப் பல்கலைக் கழக நூலகம் அவர் பணியை நாடியது. எட்டு ஆண்டுகள் சென்னைப் பல்கலைக் கழக நூலகராகவும் சென்னைப் பல்கலைக் கழக நூலகத் துறையின் தலைவராகவும் திகழ்ந்தார். அவ்வமயம் அவரிடம் நூலகப் பயிற்சி பெற்ற மாணவர்கள் பலர். அவர்களில் பலர் தமிழ் நாட்டிலும் இந்தியாவின் பிறபகுதிகளிலும் உள்ள நூலகங்களில் உயர்ந்த நிலையில் பணியாற்றுகின்றனர். நூலகத் துறையில் ஒரு தலைமுறையினரையே உருவாக்கிய பெருமை அவருக்குண்டு.



சென்னைக் கிறித்தவக் கல்லூரியில் மறைமலையடிகளாரிடம் பாடம் பயின்ற பேறுடைய திரு நாயுடு அவர்கள் ஆசிரியப் பணியாற்ற வேண்டுமென்றே லண்டன் சென்று ஆசிரியப் பயிற்சி பெற்றார். எனினும் நூலகப் பணி அவரை விடாது நாடி மீண்டும் நூலகப் பயற்சிபெற லண்டனுக்கே அனுப்பியது. இளமையிலேயே இருமுறை மேனாடு சென்று தம்மைத் தம் பணிக்கேற்றவகையில் தகுதி படைத்துக் கொண்டார். மீண்டும் ஒரிரு முறை மேனாடுகட்குச் சென்று நூலகப் பணி வளர்ச்சியைக் கண்டறிந்து வந்துள்ளார்.

தாம் 24—9—1893இல் பிறந்த ஊராகிய திருப்பாதிரிப்புலியூரில் வாழ்ந்த ஞானியாரடிகளுடன் திரு நாயுடு அவர்கட்குச் சிறுவயதிலேயே நெருங்கிய தொடர்பு உண்டு. அதன் விளைவாகத்தான் ஆங்கிலத்திலும் தமிழிலும் ஆற்றொழுக்கான நடையில் பேசும் ஆற்றல் அவர்கட்கு ஏற்பட்டதுபோலும். அரசியல் மேடையில் முழங்குவதுபோல அறிவுத் துறை மேடையில் முழங்கியவர் அவர்.

அரசியல், வரலாறு, பொருளியல் போன்ற பல்வேறு தலைப்புக்களில் 30 சொற்பொழிவுகளைச் சென்னை மறைமலையடிகள் நூல்நிலையத்தில் 1968-69ஆம் ஆண்டுகளில் அவர் நிகழ்த்தினார். நூலகத்துறைபற்றிய 12 சொற்பொழிவுகளைச் சென்னை மாவட்ட நூலக ஆணைக்குழுவும் மறைமலையடிகள் நூல்நிலையமும் சேர்ந்த அமைப்பின் கீழ் நிகழ்த்தினார்.

நூலகப் பணிக்காகவே வாழ்ந்து மறைந்த பேராசிரியர் ஆன்மா இறையடியில் இன்புறவும் அவரைப் பிரிந்து வாடும் அவர்தம் குடும்பத்தார் ஆறுதல் பெறவும் எல்லாம் வல்ல இறைவன் அருள் புரிவானாக.

— —

செய்திகளும் குறிப்புகளும்

குழந்தை நூலாசிரியர்கட்குப் பரிசும் பாராட்டும்

13—11—73இல், குழந்தை எழுத்தாளர் சங்கத்தின் சார்பில் குழந்தைகள் நாள் விழா, சென்னை மயிலையில் சிறப்புற நடைபெற்றது. திருவாட்டி இலக்குமி கிருட்டிணமூர்த்தி தலைமை தாங்கினார். குழந்தை எழுத்தாளர் சங்கத் தலைவர் திரு. அழ. வள்ளியப்பா வரவேற்புரை நிகழ்த்தினார். தொழில்துறை அமைச்சர் மாண்புமிகு செ. மாதவன், சிறந்த நாடகம் சிறுகதை ஆகியவற்றை எழுதிய குழந்தை இலக்கிய ஆசிரியர்கட்குப் பதக்கம் வழங்கினார். புதிதாக வெளிவந்துள்ள 18 குழந்தை இலக்கியங்களை வெளியிட்டுப் பாராட்டுரை வழங்கிய அவர், இலக்கிய வளர்ச்சி கருதிக் குழந்தை இலக்கியங்களை எழுதும் ஆசிரியர் கட்குத் தொழில் வளர்ச்சிக்கு உதவுவது போல் உதவ அரசு முன் வரும் என்று கூறினார். அமைச்சர் மாதவன் அவர்கள் தமது உரையில் கழக ஆட்சியாளர் பதிப்புத்துறையில் செய்துவரும் பணியைச் சிறந்தெடுத்துப் பேசினார். குழந்தைகள் நூற்காட்சியில் கழக நூல்கள் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

முதியோர் கல்வி, நூலகம் ஆகியவற்றின் தனி அலுவலர் திருவாட்டி எஸ். சரோஜனி அம்மையார் பாராட்டுரை வழங்கினார். சங்கச் செயலர் திரு. எம். ஆர். அரங்கராசன் நன்றிநவில விழா இனிது முடிந்தது.

நெல்லைத் திருவள்ளுவர் மேம்பாலம்

நெல்லைச்சந்திப்பில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள இரண்டு அடுக்கு மேம்பாலமொன்றைக் கடந்த 13—11—73இல் தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் கருணாநிதி திறந்து வைத்தார். இந்தியா வில் முதன்முதலாகக் கட்டப்பட்டுள்ள இரண்டடுக்குப் பாலம் இதுவே யாகும். இப் பாலத் திறப்புவிழாவில் பேசியகலைஞர் இரண்டு வரிகளில் உலகை வென்றவர் வள்ளுவர். எனவே இரண்டு அடுக்காகக் கட்டப் பட்டுள்ள இப் பாலத்திற்கு வள்ளுவர் பெயரை அமைப்பது பொருத்த முடைத்தாகும் என்று குறிப்பிட்டார். இப் பாலத்திற்குப் பேராசிரியர் கா. சு. பிள்ளையவர்கள் பெயரை வைக்க வேண்டுமென்று பல தமிழன் பர்கள் விரும்பினர். எனினும் கலைஞரவர்கள் ஈரடுக்குக் காரணம் பற்றி இப்பெயர் அமைத்தது சாலப் பொருத்தமுடையதே.

சென்னை மாவட்ட நூலக வாரவிழா

கடந்த 14—11—73முதல் 20—11—73முடியச் சென்னை மாவட்டக் கட்டிடத்தில் நடைபெற்றது. முதல்நாள் சிறுவர் நூலகப் பகுதியைக் கல்வி அமைச்சர் மாண்புமிகு டாக்டர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் திறந்து வைத்து அரிய உரையாற்றினார். நூலக ஆணையர் திரு. கே. பி. சுந்தரம் தலைமை தாங்கினார். ஒவ்வொரு நாள் விழாக்களில் முறையே மாண்புமிகு அமைச்சர்கள் சாதிக்பாட்சா, அன்பில் தருமலிங்கம், என். வி. நடராசன், மன்னை நாராயணசாமி, பேராசிரியர் அன்பழகன், ப. உ. சண்முகம் ஆகியோரும் மேலவைத் துணைத் தலைவர் சிலம்புச் செல்வர் மா. பொ. சி, குடிசைமாற்று வாரியத் தலைவர் இராம அரங்கண்ணல் எம். எல். ஏ., பள்ளிக்கல்வி இயக்குநர் திரு. சிட்டிபாபு ஆகியோர் பங்கேற்று உரையாற்றினர்.

திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திற்காக, சென்னை 2-140, பிரகாசம் சாலை, அப்பர் அச்சகத்தில் திரு. வ. சுப்பையா அவர்களால் அச்சிடப்பெற்றது.
ஆசிரியர் : வ. சுப்பையா.

கழகப் புதிய வெளியீடுகள்

திருவருட்பாப் புகழ்த்திரட்டு

.—வள்ளலார் இராமலிங்க அடிகள்

இது திருக்குறள் தெளிவுரையைப்போல் கையடக்கமான தொரு பதிப்பு. இதன்கண் திருவருட்பாவினின்று 'திருவடிப் புகழ்ச்சி' 'மகாதேவமாலை' 'அருட்பெருஞ் சோதி அகவல்' 'அருட் பெருஞ் சோதி அட்டகம்' ஆகிய நான்கு பதிகங்கள் முழுமை யாகவும், மற்றுமுள்ள பதிகங்களினின்றும் கீர்த்தனங்களினின்றும் பிள்ளையார், முருகன், சிவபெருமான், உமையம்மை, அம்பல வாணர், திருமால் ஆகிய தெய்வங்களைப்பற்றி வள்ளலார் பாடியுள்ள பாடல்களுள் சிலவும் இடம் பெற்றுள்ளன. விலை 2-25

உயர்ந்த பரிசுப் பதிப்பு விலை 4-00

அம்புலிப் பயணம்

—டாக்டர் ந. சுப்பு ரெட்டியார், எம்.ஏ., பி.எசி.பி.டி.

நிலவுலகினின்று நிலா உலகிற்குப் பயணம் செய்யும் முயற்சி யில் பன்னெடுங் காலமாக ஈடுபட்டு வரும் மனிதனின் முயற்சி வெற்றிபெற்ற காலம் இது. இத்துறையில் அமெரிக்க, உருசிய விண்வெளி வீரர்கள் பெற்றுள்ள வெற்றிகளையும் 17 அப்போலோ பயணங்கள் பற்றியும் விளக்கமாகச் சிறுவர்க்கும் பயன்படும் வகையில்-படங்களுடன் வெளிவந்துள்ள அழகிய பதிப்பு. விலை 3-50

காட்டு வளம்

— உ. அஞ்சனமழகிய பிள்ளை, பி.எசி (வேளா.)

காட்டு வளத்தின் இன்றியமையாமை, காட்டு வளத்தைப் பெருக்குவது எப்படி, காடுகளையும் காட்டு விலங்குகளையும் பாதுகாத் தலின் இன்றியமையாமை, காடுதரும் பொருள்கள் இன்னபிற செய்திகள் இந்நூலின்கண் விளக்கப்பட்டுள்ளன. கல்லூரிகளிலும் பொது நூலகங்களிலும் இருக்க வேண்டிய நூல். விலை 8-75

இலக்கணச் சொற்பொருள் விளக்க அகரவரிசை – பகுதி–க

– தொகுப்பாசிரியர்: புலவர் இரா. இளங்குமரன்

இலக்கணங்கள் பலவிதம். அவற்றுள் இஃதொரு புதுமையான முறையில் அமைக்கப்பட்டுள்ளது. இதன்கண் எழுத்திலக்கணமும் சொல்லிலக்கணமும் அகரவரிசையில் விளக்கப்படுகின்றன. அகரா தியைப் புரட்டி இலக்கியச் சொற்களுக்குப் பொருள் காண்பதுபோல இதன் துணைகொண்டு சொல்லிலக்கண விளக்கங்களை எளிதில் அறிந்து கொள்ளலாம். விலை 8-75

பதிவு எண் : M. 4899

பிற பதிப்பாளரின் வெளியீடுகள்

சிலம்புச் செல்வம்—*புலவர் மு. சுப்பிரமணியன்*

சிலப்பதிகாரத்தில் வரும் பலதிறப்பட்ட செய்திகளைப் பற்றிய 63 ஆராய்ச்சிக் கட்டுரைகளின் தொகுப்பே சிலம்புச் செல்வம் என்னும் இந்நூல். 5 00

நாலாயிர திவ்யப்பிரபந்தம்—*கி. வேங்கடசாமி ரெட்டியார்*

புதிய பதிப்பாக வெளிவந்துள்ள இந்த நாலாயிர திவ்யப் பிரபந்தம் கருத்து விளக்கம், அரும்பதவுரை ஆகியவற்றுடன் கூடியது. 15-00

வள்ளுவர் வாய்மொழி—*செ. து. சுந்தரவடிவேலு*

திருக்குறளைப் பற்றிய ஆராய்ச்சியில் இறங்குவார்க்குப் பயன்படும் வகையில் வள்ளுவரின் கருத்துக்களை எடுத்துரைக்கும் ஓர் ஆராய்ச்சி நூல். 2-00

தவத்திரு ஞானியாரடிகள்—*வெள்ளையம்பட்டு சுந்தரம்*

ஞானியாரடிகளின் வரலாற்றினை இனிய தமிழில் எடுத்துரைக்கும் வரலாற்று நூல். 2-50

சில உரத்த சிந்தனைகள்—*வலம்புரி ஜான், பி ஏ.,பி.எல்.*

சட்டம், சமதர்மம், சமுதாயம், அரசியல் இன்னபிற துறைகளில் ஆசிரியரின் உரத்த சிந்தனைகளின் அரிய தொகுப்பே இந்நூல். 2-00

சுயாட்சியா, சுதந்திரமா?—*வலம்புரி ஜான், பி.ஏ.,பி.எல்.*

மாநில சுயாட்சியின் இன்றியமையாமையினையும் அதுபற்றி நிலவும் தவறான கருத்துக்களுக்கு விடைதரும் வகையிலும் வெளிவந்துள்ள நூல். 2-50

விஞ்ஞானத்தின் விளைவு—*ஜி. ஆர். தாமோதரன்*

விஞ்ஞானத்தின் ஆற்றல்கள் யாவை, மாறிவரும் காலச் சூழலில் விஞ்ஞானிகளின் நிலைஎன்ன என்னும் வினாக்களுக்கு விடைதரும் நூல். 3-75

The Great Temple of Madurai—K. Palaniappan

தென்னிந்திய திருக்கோயில்களின் தோற்றம், வரலாறு, மதுரைக்கோயிலின் வரலாறு இன்னபிற செய்திகளை ஆங்கிலத்தில் கூறுகிறது இந்நூல். 8-00

நாட்டுப்புறப் பாடல்கள் - திறனாய்வு
—*ஆறு அழகப்பன், எம்.ஏ., எம் லிட்.*

நாட்டுப் புறப் பாடல்கள் என்றும் நாடோடிப் பாடல்கள் என்றும் சொல்லப்படும் பாடல்கள் பற்றிய திறனாய்வாகிய இந்நூல் நல்லதோர் இலக்கியமாகத் திகழ்கின்றது.

அப்பர் அச்சகம், சென்னை-1.